வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු

Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 26.01.2024 வெள்ளிக்கிழமை இதழ் : 26 பக்கங்கள் : 12




அதிவேகத்தில் நொறுங்கியது ஜீப்

## இராஜாங்க அமைச்சர் நிஷாந்தவும் அவரின் மெய்ப்பாதுகாவலரும் பலி!



கொழும்பு, ஜன. 26

கட்டுநாயக்கா அதிவேக நெடுஞ்சாலையில் நேற்று அதிகாலை இடம்பெற்ற விபத்தில் இராஜாங்க அமைச்சர் சரத் நிஷாந்தவும் அவரின் மெய்ப்பாதுகாவலரும் உயிரிழந்தனர்.

நேற்று வியாழக்கிழமை அதிகாலை 2 மணியளவில் கந்தானைக்கு அண்மையாக இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

கட்டுநாயக்காவிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த இராஜாங்க அமைச்சரின் ஜீப் கொள்கலன் வாகனத்துடன் மோதி பின்னர், வீதியின் பாதுகாப்பு வேலியுடன் மோதுண்டு நொறுங்கியது.

இதில் ஜீப்பில் பயணித்த

11

## தமிழினத்தை பொறுப்புடன் வழிநடத்தும் கட்டாயம் இன்று எங்களின் கைகளில்!

### மன்னாரில் கூறினார் சிறிதரன் எம்.பி.



மன்னார், ஜனவரி 26

"சிங்கள மக்களும் இந்த மண்ணுக்குச் சொந்தமானவர்கள் என்பதை நாங்கள் நிராகரிக்கவில்லை, சிங்கள மக்கள் இந்த மண்ணுக்கு வரும் முன்னரே தமிழர்கள் இந்த மண்ணின் பூர்வீகக் குடிகளாக இருந்துள்ளனர். இந்த நாட்டில் தமிழர்கள் அடையாளத்துடன் இருந்துள்ளனர், இறைமையுடன் இருந்துள்ளனர்" என பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்துள்ளார்.

11

## சனத் நிஷாந்தவின் இடத்துக்கு பிரியங்கர!

எதிரணியில் அமர்வார்?

கொழும்பு, ஜன. 26

இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவின் மரணத்தால் வெற்றிடமான பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கு பொதுஜன பெரமுனவின் ஜெகத் பிரியங்கர நியமிக்கப்படவுள்ளார்.

கடந்த, 2020ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தல் முடிவுகளின்படி இந்த நியமனம் வழங்கப்படவுள்ளது.

இந்தத் தேர்தலில் சிறீ லங்கா பொதுஜன பெரமுன கட்சிக்கு புத்தளம் மாவட்டத்திலிருந்து 5 பாராளுமன்ற ஆசனங்கள் கிடைத்தன. முதல் 5

11

## வடக்கு, கிழக்கில் மழைக்கு வாய்ப்பு; அறுவடையை தவிர்க்க ஆலோசனை!

யாழ்ப்பாணம், ஜன. 26

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நாளை சனிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் புதன்கிழமை வரை கனமானது முதல் மிகக் கனமானது வரை மழை கிடைக்க வாய்ப்புள்ளது என்று யாழ். பல்கலைக்கழக புவியியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் நா. பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தற்போது பெரும் போக நெல் அறுவடை மும்முரமாக நடக்கின்றது. எனவே, அறுவடையில் ஈடுபடும்

11

## இணையவழி காப்பு சட்டமூலத்தின் தாக்கம் குறித்து அமெரிக்கா கவலை

கொழும்பு, ஜன. 26

அதிக வரையறைகளை விதிக்கும், தெளிவற்ற சட்டங்கள் மூலம் இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி பாதிக்கப்படும் என இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

அவை முதலீடுகளையும் டிஜிட்டல் பொருளாதார அபிவிருத்தியையும் பாதிக்கும் எனவும் அவர் முன்னெச்சரிக்கை விடுத்துள்ளார்.

எக்ஸபாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட

11

## இணையவழி காப்பு சட்டத்தால் பொருளாதாரத்திலும் பாதிப்பு!

ஹர்ச டி சில்வா சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜன. 26

சமூக ஊடகங்களை ஒழுங்குபடுத்த வேண்டிய தேவையிருப்பினும் இணையவழி பாதுகாப்பு சட்ட மூலத்தின் பொருளாதார விளைவுகளை அரசாங்கம் பரிசீலிக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ச டி சில்வா கோரியுள்ளார்.

11

## இளையராஜாவின் மகள் கொழும்பில் காலமானார்!



கொழும்பு, ஜன. 26

புற்றுநோய்க்கு சிகிச்சை பெறுவதற்காக கொழும்பு வந்த பிரபல தென்னிந்திய பாடகியும் இசைஞானி இளையராஜாவின் மகளுமான பவதாரணி (வயது 47) நேற்று மாலை மாரடைப்பால் காலமானார்.

நேற்று வியாழக்கிழமை மாலை 5.20 மணியளவில் பவதாரணிக்கு நெஞ்சுவலி ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து அவர் கொழும்பு தேசிய மருத்துவமனை யில் சேர்க்கப்பட்டார். எனினும், அவர்

11

## பாராளுமன்றம் இன்று ஒத்திவைக்கப்படலாம்

கொழும்பு, ஜன. 26

பாராளுமன்ற அமர்வு இன்று நள்ளிரவுடன் ஒத்திவைக்கப்படலாம் என்று தெரிய வருகின்றது

அத்துடன் ஒன்பதாவது பாராளுமன்றத்தின் நான்காவது அமர்வு நிறைவு பெறும்.

அதன் பின் எதிர்வரும் பெப்ரவரி 07ஆம் திகதி ஜனாதிபதியின் தலைமையில் பாராளுமன்றத்தின் புதிய அமர்வு உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்படும்

பாராளுமன்றத்தின் அமர்வு நேற்று முன்தினம் ஒத்திவைக்கப்படுவதாக இருந்த போதும் சில காரணங்களினால் அதனை மேற்கொள்ள முடியாமல் போனதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பாராளுமன்ற அமர்வு ஒத்தி வைக்கப்பட்டவுடன் பாராளுமன்ற குழுக்களின் தலைவர் மற்றும் அங்கத்தவர் பதவிகளும் காலியாகும்.

11

## நாடு முழுவதிலும் ஏற்றுமதி வலயம்!

ஜனாதிபதி ரணில் அறிவிப்பு

கொழும்பு, ஜன. 26

திறந்த பொருளாதாரத்தில் முழுமையாகப் பயனடையும் வகையில் நாடு முழுவதும் புதிய முதலீட்டு வலயங்களை உருவாக்கி, தேசிய பொருளாதாரத்தை பத்து மடங்கு மேம்படுத்த நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

சபுகஸ்கந்த அபேசேகரராமவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட போதி மதில் மற்றும் தங்க வேலி திறப்பு நிகழ்வில் நேற்று வியாழக்கிழமை முற்பகல் கலந்து கொண்டபோதே ஜனாதிபதி

11

## சஜித்தின் கூட்டணியை உடைக்க ரணில் வியூகம்!

நாலக கொடஹேவா எ.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 26

ஐக்கிய மக்கள் சக்தி தலைமையில் அமையவுள்ள கூட்டணியை சீர்குலைக்கும் முயற்சியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஈடுபட்டுள்ளார் - என்று சுதந்திர மக்கள் சபையின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி நாலக கொடஹேவா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் நான்தான் நிதி அமைச்சர், பொருளாதார அமைச்சர் என்றெல்லாம் ஜனாதிபதிதான் கூறி வருகின்றார்.

11

## இப்படியும் நடக்கிறது

ஓர் அரசனிடம் சுயமாக சிந்திக்கத் தெரியாத முட்டாள் ஒருவன் வேலை பார்த்து வந்தான். ஒருநாள் அரசன் அவனுடன் வெளியூர் சென்றான். வழியில் இருட்டி விட்டது. எனவே, அங்கிருந்த ஒரு சத்திரத்தில் தங்க முடிவு செய்து, குதிரையை வெளியில் ஒரு மரத்தில் கட்டிவிட்டு, வேலைக்காரனிடம், இரவு முழுவதும் தூங்காமல் குதிரையைப் பார்த்துக் கொள்ளச் சொன்னார்.

'இரவு முழுவதும் எப்படி தூங்காமல் இருப்பது' என்று அந்த வேலைக்காரன் சந்தேகம் கேட்க, 'ஏதேனும் தீர்க்க முடியாத பிரச்னை பற்றி சிந்தித்துக் கொண்டிருந்தால் தூக்கம் வராது', என்றார் அரசன்.

அவனும் சரி என்றான். சிறிது நேரம் கழித்து அரசர், அவன் என்ன செய்கிறான் என்பதை பரிசோதிக்க வெளியே வந்தார். அவனும், 'அரசே, நான் தூங்கவில்லை. வானில் இருக்கும் நட்சத்திரங்கள் தானாக வந்தனவா அல்லது யாரேனும் கொண்டு வந்து போட்டார்களா என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன்', என்றான்.

"நல்லது", என்று கூறிச் சென்ற அரசன் சிறிது நேரம் கழித்து மீண்டும் வந்தார்.

அவன் சொன்னான், 'அரசே, கடலில் உப்பு தானாக வந்ததா, அல்லது யாரேனும் கொண்டு வந்து கொட்டினார்களா என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன்.'

அரசன் நிம்மதியுடன் படுத்து தூங்கிப் போனான்.

காலையில் எழுந்து வந்து பார்த்தபோது வேலையாள் சீரியசிந்தனை வசப்பட்டு இருப்பதைப் பார்த்த அரசன், 'இப்போது என்ன யோசித்துக் கொண்டிருக்கிறாய்?' என்று கேட்டார்.

அவன் சொன்னான், 'அரசே, உங்கள் குதிரை தானாக ஓடி விட்டதா அல்லது யாரேனும் திருடிச் சென்று விட்டார்களா என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன்.'

இந்தக் கதைதான் இப்போது அடிக்கடி ஞாபகத்துக்கு வருகின்றது.

தமிழரசு கட்சி தலைவர் பதவிக்கு பலர் பெயர்கள் முன்மொழியப்பட்டபோது, தங்கள் கட்சியில்தான் இவ்வாறு தலைவர் பதவிக்கு தகுதியானவர்கள் பலர் இருக்கிறார்கள் என்று சான்றிதழ் கொடுத்தவர், அந்தப் பதவிக்கு போட்டியிட்டவர்களில் ஒருவரான சுமந்திரன். அதாவது சிறீதரனும் தலைவர் பதவிக்கு போட்டியிடுவதற்கு தகுதியானவர்தான் என்று.

நேற்று ஒரு முக்கிய பிரமுகரிடமிருந்து குறுந்தகவல் வந்தது. அது ஒருவரின் ஊடக சந்திப்பின் காணொலி காட்சி. அதில் அவர் சிறீதரனை 'வாங்கு வாங்கென்று' வாங்கியிருந்தார். அவர் யார் என்று இவருக்கு தெரிந்திருந்தால் அதனை பகிர்ந்திருக்க மாட்டார்.

ஆனால், அவரது மகிழ்ச்சி எல்லாம் சிறீதரனை போட்டுத் தாக்குகிறார் என்பதுதான். ஏனெனில், அவர் தமிழரசின் தலைவராக சுமந்திரன் தெரிவாகவேண்டும் என்று விரும்பியவர். அதனால் சிறீதரனுக்கு எதிராக ஒருவர் பேசுவது இவருக்கு மகிழ்ச்சியைத் தந்திருக்கின்றது.

இன்னுமொரு செய்தி, தமிழரசு கட்சி இப்போது வட்டக்கச்சி கட்சியாகிவிட்டதாம். தனது கட்சிதான் உலகளாவிய கட்சியாம். வட்டக்கச்சி என்பது சிறீதரனின் சொந்த இடம் என்பது தெரிந்தவர்களுக்கு அவர் ஏன் அப்படிச் சொன்னார் என்பது புரிந்திருக்கும்.

இப்படிச் சொன்னவர் வேறு யாருமல்லர், நமது தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரி ஐயாதான். அவர் மீது இந்த ஊர்க்குருவிக்கு ஒரு மரியாதை இருந்தது - இப்போதும் இருக்கின்றது. அதற்காக அவர் செய்வது- சொல்வது எல்லாம் சரி என்பதல்ல.

இங்கே அரசியல் கட்சிகளிடையே, பெரியது சிறியது என்பதெல்லாம் மக்களின் செல்வாக்கை வைத்தே தீர்மானிக்கப்படுகின்றது. டக்ளஸ் தேவானந்தாகூட அடிக்கடி சொல்வார், மக்கள் எனக்கு அதிகாரத்தைத் தந்தால் நான் இன்னும் பல விடயங்களை செய்துகாட்டுவேன் என்று, அதாவது தனது கட்சிக்கு அதிகளவான எம். பிக்களை தெரிவுசெய்ய ஆதரவு தந்தால் என்பது அதன் பொருள்.

ஆக, யார் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்பது தேர்தல்களில் அதிக மக்களின் ஆதரவைப் பெறுவதிலிருந்தே முடிவு செய்யப்படுகின்றது.

சங்கரி ஐயா, முதலில் தமிழ் மக்களின் ஆதரவைப் பெறுவதற்கு முயற்சிக்கவேண்டும். அதற்குப் பின்னர் யார் பெரியவர்கள் என்பதைப் பற்றி பேச வேண்டும்.

தமிழரசு கட்சியின் தலைவராக சிறீதரன் தெரிவு செய்யப்பட்ட பின்னர் விடுத்த அழைப்பில், மீண்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்குவோம் என்று தெரிவித்திருந்தார். அதுபற்றி ஒரு முன்னைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக்கட்சி ஒன்றின் தலைவரிடம் கேட்டபோது, அவர் சொன்னார், 'அவர்கள் தானே வெளியே போனவர்கள். விரும்பினால் வந்து சேர வேண்டியதுதானே' என்று.

அவர் சொன்னது இரண்டாயிரத்து ஒன்பதுக்கு முந்தைய கூட்டமைப்பு பற்றியது. அதில் முன்னணியும் இருந்தது. ஒன்பதுக்கு பிந்திய கட்சிகளைப் பற்றியும் அவர் சொன்னாரா என்பதும் இதுவரை விளக்கமாகத் தெரிவிக்கப்படவில்லை.

நாளை தமிழரசின் மற்றைய பதவிகளுக்கான 'கயிறிழுப்பு' முடிந்த பின்னர் அவரிடமிருந்து விபரங்களைப் பெறலாம் என்று நினைக்கின்றேன்.

**- ஊர்க்குருவி.**

## சனத் நிஷாந்தவின் பூதவுடலுக்கு ஜனாதிபதி ரணில், மகிந்த அஞ்சலி!

கொழும்பு, ஜன. 26

நேற்று அதிகாலை நடந்த விபத்தில் உயிரிழந்த இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவின் பூதவுடலுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் ஜனாதிபதியும் பாராளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜபக்ஷ ஆகியோர் நேற்று சென்று அஞ்சலி செலுத்தினர்.





புத்தளத்தில் நிகழ்வு ஒன்றில் பங்கேற்றுவிட்டு கொழும்பு நோக்கி பயணித்த இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த கட்டுநாயக்கா அதிவேக வீதியில் - கந்தான பகுதிக்கு அண்மையாக இடம்பெற்ற விபத்தில் உயிரிழந்தார். அவருடன், பயணித்த மெய்ப்பாதுகாவலரும் உயிரிழந்தார். வாகன சாரதி படுகாயமடைந்துள்ளார்.

நேற்றைய தினம் சனத் நிஷாந்தவின் வீட்டுக்கு சென்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்.ராகம போதனா மருத்துவமனைக்கு சென்ற ஜனாதிபதி அங்கு இராஜாங்க அமைச்சரின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்தினார்

இதேபோன்று, மகிந்த ராஜபக்ஷவும் இராஜாங்க அமைச்சரின் குடும்பத்தினரை சந்தித்து ஆறுதல் கூறியதுடன், இராஜாங்க அமைச்சரின் உடலத்துக்கும் அஞ்சலி செலுத்தினர்.

இதேநேரம், இராஜாங்க அமைச்சரின் உடலம் கொழும்பில் உள்ள தனியார் மலர்ச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

## விலா எலும்பு 22 துண்டாகும்வரை தாயாரை தாக்கிக் கொன்ற மகன்!

நுவரெலியா, ஜன. 26

தாயாரின் விலா எலும்பு 22 துண்டுகளாக உடையும் வகையில் தாக்கிக் கொலை செய்த மகனை பொலிஸார் கைது செய்தனர்.

இந்த சம்பவம் நுவரெலியா - நாவலப்பிட்டியில் இடம்பெற்றுள்ளது. இதில், நாவலப்பிட்டியை சேர்ந்த எஸ். செல்லம்மா (வயது - 67) என்பவரே உயிரிழந்தவராவார்.

கைதானவர், சில நாட்களுக்கு முன்னர் தனது தந்தையையும் தாக்கியுள்ளார். இதில் தலையில் காயமடைந்த அவர் தனது மூத்த மகளின் வீட்டுக்கு சென்று அங்கேயே தங்கியுள்ளார்.

இந்த நிலையில், கடந்த 17 ஆம் திகதி தனது மனைவியை தாக்கியுள்ளார். அவர், தனது தாயாரின் வீட்டுக்கு சென்றுள்ளார். தனது தாயுடன் வசித்து வந்த சந்தேகநபர் கடந்த 20ஆம் திகதி அவரை கடுமையாக தாக்கியுள்ளார்.

இதில், அவரின் தாயார் உயிரிழந்தார். பிரேத பரிசோதனையில் தாயாரின் தலையில் காயங்கள் காணப்பட்டன. அத்துடன், அவரின் விலா எலும்பு 22 துண்டுகளாக உடைந்துள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## அநுரகுமார ஜனாதிபதியாகிவிடுவார்; தேர்தலை பின்னடிக்க இதுவே காரணம்!

### தேசிய மக்கள் சக்தி சாடல்

சாய்ந்தமருது, ஜன. 26

நாட்டின் புதிய ஜனாதிபதியாக எதிர்காலத்தில் அநுரகுமார திஸநாயக்க வருவார் என்ற அச்சத்தில் அரசாங்கம் தேர்தலை நடத்த பின்னிற்கின்றது என தேசிய தொழில் சங்க சம்மேளனத்தின் தலைவரும் தேசிய மக்கள் சக்தியின் தேசிய செயல்குழு உறுப்பினருமாகிய கே. டி. லால் காந்த தெரிவித்துள்ளார்.

அகில இலங்கை பொது மீனவர் சம்மேளனம் ஏற்பாட்டில் இடம்பெறும் 2024 ஆண்டிற்கான அம்பாறை மாவட்ட மீனவர் மாநாடு சாய்ந்தமருதில் நடந்தது.

அங்கு பேசிய அவர், "மீனவர் சமூகம் சிங்களவராக இருந்தாலும், தமிழராக இருந்தாலும், முஸ்லிமாக இருந்தாலும் ஏழைகள். விவசாய சமூகத்தை பார்த்தாலும் தமிழராக இருந்தாலும், சிங்களவராக இருந்தாலும், முஸ்லிமாக இருந்தாலும் ஏழைகள், அரச ஊழியர்களை நாங்கள் பார்த்தாலும் சிங்களவராக இருந்தாலும், தமிழராக இருந்தாலும், முஸ்லிமாக இருந்தாலும் இன்றைய நாளிலே ஒருநாள் சாப்பிடுவதற்கு கஷ்டப்படுகின்ற இனமாக இருக்கின்றது.

இந்த இடத்தில் எனக்கு விளங்குகின்றது பொலிஸ் உத்தியோகத்தர்கள் பலர் கடமை செய்கின்றார்கள் அவர்களும் ஏழைகள். ஆகவே இந்த நாட்டிலே வேலை செய்கின்ற சமூகம் கடந்த 76 வருடங்களாக ஏழைகளாக இருக்கின்றது. ஆகவேதான் இந்த ஏழை சமூகத்தை உண்டு, உடுத்த அவர்களது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக இப்போது எங்களுக்கு ஒரு சந்தர்ப்பம் அமைந்திருக்கிறது. அதற்காக எனக்ளுக்கு பல்வேறு பட்ட வேலைகள் காணப்பட்டிருக்கின்றன.

ஆகவே தான் இன்று இந்த மீனவ சமூகம் மீனவர்களையும் மீனவ சமூகம் அனைத்தையும் உருவாக்கி ஒரு குடையின் கீழ் கொண்டுவரக்கூடிய வேலை எங்களுக்கு இருக்கின்றது. அகில இலங்கை பொது மீனவ சம்மேளனமாக இருக்கின்ற எங்களின் மீனவ சம்மேளனம்தான் எந்த ஆட்சி செய்தாலும், அந்த ஆட்சி செய்கின்ற அநீதிக்கு எதிராக எங்களினுடைய கோரிக்கைகளை வென்றெடுப்பதாகும் - என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu
26.01.2024 வெள்ளிக்கிழமை
சோபகிருது வருடம், தை 12

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# 2009இற்கு முன்னரான கூட்டமைப்பின் சாத்தியம்!

தமிழரசு கட்சியின் புதிய தலைவர் சிவஞானம் சிறீதரன் 2009இற்கு முன்னர் இருந்தது போன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஏற்படுத்தத் தயாராக இருக்கிறார் என்று குறிப்பிட்டிருக்கின்றார். ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இயங்கிவரும் கட்சிகளின் கூட்டணி இதுபற்றி பொதுவெளியில் உத்தியோகபூர்வமாக எந்தவோர் அபிப்பிராயங்களையும் வெளியிடவில்லை.

சிறீதரன் கூறுவது எந்தளவுக்கு சாத்தியமானது என்பதற்கு அப்பால் 2009இற்கு முன்னர் இருந்தது போன்று கூட்டமைப்பாக இயங்குவது என்றால் அதன் தலைமைப் பொறுப்பை யார் ஏற்பது? எல்லோராலும் ஏற்றுக்கொள்ளக்கூடியதொரு தலைமைத்துவம் இருக்கின்றதா அல்லது இணைத் தலைமை ஒன்றுக்கு தமிழரசு கட்சி உடன்படுமா?

2009இற்கு முன்னரான அரசியல் சூழல் முற்றிலும் மாறுபட்டது. அப்போதைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முற்றிலுமாக விடுதலைப் புலிகளால் கட்டுப்படுத்தப்பட்டது. 2001இல் நடைபெற்ற தேர்தலின்போது விடுதலைப் புலிகள் இயக்கம் பெரியளவில் கூட்டமைப்பின் மீது ஈடுபாடு காண்பித்திருக்கவில்லை. ஆனால், 2004 தேர்தலின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முற்றிலும் அவர்களின் வசமாகவே இருந்தது. கூட்டமைப்பில் அங்கம் வகித்த கட்சிகளை விடுதலைப் புலிகள் முழுமையாக நம்பியிருக்கவில்லை.

இதன் காரணமாகவே தங்களின் விசுவாசிகளை கூட்டமைப்புக்குள் கொண்டுவந்தனர். 2004 தேர்தலின்போது கிடைக்கப்பெற்ற 22 பாராளுமன்ற ஆசனங்களில் 11 ஆசனங்கள் விடுதலைப் புலிகளால் நியமிக்கப்பட்டவர்களாகவே இருந்தனர். ஆனால், 2009இற்கு பின்னரான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சம்பந்தனால் தீர்மானிக்கப்பட்டது. சம்பந்தன் விடுதலைப் புலிகளால் நியமிக்கப்பட்டவர்களை அகற்றுவதையே தனது முதல் பணியாக கொண்டிருந்தார். இந்தப் பின்புலத்தில்தான் தமிழ்த் தேசிய அரசியல் மரபுக்கு வெளியிலிருந்து சிலரை உள்ளுக்குள் கொண்டுவர முற்பட்டார். இதன்மூலம் கூட்டமைப்பின் முகத்தை மாற்ற வேண்டும் என்பதே அவரின் இலக்காக இருந்தது. இந்தப் பின்புலத்தில்தான் ஆசனங்கள் ஒதுக்குவதில் ஏற்பட்ட முரண்பாடுகளை கருத்தில் கொண்டு கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் வெளியேறியது.

கூட்டமைப்பில் முதலாவது உடைவு ஏற்பட்டது. பின்னர் பங்காளிக் கட்சிகளை முறையாக நடத்தவில்லை என்னும் குற்றச்சாட்டின் அடிப்படையில் சுரேஷ் பிறேமச்சந்திரன் தலைமையிலான ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ. பி. ஆர். எல். எவ்.) வெளியேறிது. விடுதலைப் புலிகளின்கால கூட்டமைப்பில் சித்தார்த்தன் தலைமையிலான ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட்) அங்கம் வகித்திருக்கவில்லை. ஆனால், சம்பந்தன் அவர்களை உள்வாங்கினார். ஆனந்தசங்கரியும் பின்னர் கூட்டமைப்புடன் இணைந்தார். ஆனால், மீண்டும் முரண்பட்டு வெளியேறினார். இந்த நிலையில் 2009இற்கு முன்னர் இருந்தவாறான கூட்டமைப்பை ஏற்படுத்துவது என்பதை சிறீதரன் போன்ற ஒருவரால் சாத்தியப்படுத்த முடியுமா என்னும் கேள்வியுண்டு.

உள்ளூராட்சி தேர்தலை காரணம் காண்பித்து தமிழரசு கட்சிதான் கூட்டமைப்பிலிருந்து வெளியேறியது. இந்த நிலையில் 2009இற்கு முன்னரான கதைகளை விடுத்து ஒன்றுபட்டு செயல்படுவதற்கான வழிவகைகளை ஆராய்வதே சரியானது. தமிழரசு கட்சி தனித்துச் சென்று தனது பலத்தை காண்பிக்கும் வல்லமையுடன் இருக்கின்றதா - இதே போன்று, ஜனநாயக கூட்டணியாக இயங்கிவரும் கட்சிகள் தனித்துப் போட்டியிட்டால் எவ்வாறான ஆதரவைப் பெறுவார்கள் - இந்த இரண்டு கேள்விகளுக்கான பதிலும் இரண்டு தரப்பும் தனித்து தேர்தலை எதிர்கொண்டால் மட்டுமே வெளித்தெரியும். தனித்துச் செல்வது ஒரு விஷப்பரீட்சை ஆகிவிடலாம் என்று எண்ணினால் இணைவது பற்றி சிந்திக்க முடியும். 2009இற்கு முன்னர் போன்று சிந்திப்பது சரியானதோர் அணுகுமுறையல்ல.

# ‘பெட்டகம்’ தமிழியல் ஆவண சேகரிப்பு மைய திறப்புவிழா!

வடமராட்சி, ஜன. 26

‘பெட்டகம்’ எனும் தமிழியல் ஆவண சேகரிப்பு மையம் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மல்லாகம் வீதி குப்பிளான் சந்தியில் திறந்து வைக்கப்படவுள்ளது.

ஓய்வுபெற்ற சிரேஷ்ட நிர்வாக அதிகாரி செல்வின் இரேனியஸ் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் சி. ரகுராம் கலந்துகொள்வார்.

ஆசியுரையை வேலன் சுவாமிகளும் அறிமுக உரையை சமூக விஞ்ஞான ஆய்வு மைய இயக்குநர் சி. அ. யோதிலிங்கமும் வழங்குவர்.

யாழ். பல்கலைக்கழக அரசறிவியல்துறைத் தலைவர் பேராசிரியர் கே. ரி. கணேசலிங்கம் யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் இ. இராஜேஸ் கண்ணா அரசியல் ஆய்வாளர் நிலாந்தன் இந்து கற்கைகள்பீட சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி தி. செல்வமனோகரன் ஓய்வுநிலை கிராம சேவையாளர் சோ. பரமநாதன் ஆகியோர் ஆற்றுவர். (ஐ- 02)

# கோப்பாய் புத்தக அரங்க விழா; இரண்டாம் நாள் நிகழ்வு இன்று!

யாழ்ப்பாணம், ஜன. 26

தேசிய கலை இலக்கிய பேரவையால் ‘நூறு மலர்கள் மலரட்டும்’ என்ற தொனிப்பொருளில் நடத்தப்பட்டு வரும் புத்தக அரங்க விழாவின் 16 நிகழ்வு கோப்பாய் தெற்கு, பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயத்தின் பிரதான மண்டபத்தில் நேற்று ஆரம்பமானது.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறவுள்ள இந்த விழாவில் இரண்டாம் நாள் நிகழ்வான இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஈழத்து நூல்களின் அறிமுகமும் கலந்துரையாடலும் நடைபெறவுள்ளது.

கலைஞர் க. சத்தியசீலன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் எஸ். பாலாவின் ‘ஒரு கிராமத்தின் பக்தி நெறிப் பயணம்’ நூல் தொடர்பாக ஆசிரியர் சி. இந்திரராஜன், பி. முத்துலிங்கத்தின் ‘அரசியல் பொருளாதாரம், தத்துவம் ஒரு பார்வை’ நூல் தொடர்பாக எழுத்தாளர். மு.அநாதரட்சகன் , யோகேஸ்வரி சிவப்பிரகாசத்தின் ‘சாதகப் பறவைக்கு வேண்டுமோ கானல் நீர்?’ நூல் தொடர்பாக கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் வேல். நந்தகுமார், சோ. தேவராஜாவின் ‘நான் நானல்ல’ கவிதைத் தொகுப்பு தொடர்பாக ஓய்வுநிலை ஆசிரியர் சு. சிவநேசராசன் ஆகியோர் அறிமுக உரைகளை ஆற்றவுள்ளனர்.

இந்த நிகழ்வின் விசேட அம்சங்களாக காலை 9 மணி தொடக்கம் மாபெரும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும் நடைபெறும். மாலை 5 மணியளவில் சண் நாடகக் குழுவின் தயாரிப்பில், பு. கணேசராஜாவின் நெறியாள்கையில் ‘என்னவென்று சொல்வேனடி..?’, ‘தலையெழுத்து’ ஆகிய நாடகங்கள் அரங்கேறவுள்ளன. (ஐ)

# வன்புணர்வு குற்ற சட்ட மூலத்தில் குறைபாடுகளை திருத்த அனுமதி!

கொழும்பு, ஜன. 26

தண்டனை சட்டக் கோவையில் வன்புணர்வுக் குற்றம் தொடர்பில் சட்டத் திருத்தம் செய்வதற்கும், சட்டத்தில் காணப்படுகின்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

நீதி சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் முன்வைத்த யோசனைக்கு இவ்வாறு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், ஆண் பிள்ளைகள் வன்புணர்வுக்கு உட்படுத்தப்படுவது குற்றச் செயல். இதனை தண்டனை சட்டக்கோவையில் அறிமுகப்படுத்துவதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ஐ)

# கடலில் நீராடிய ஒருவர் மரணம்!

## மற்றொருவர் மாயம்

கொழும்பு, ஜன. 26

கடலில் குளிக்கச்சென்ற ஒருவர் உயிரிழந்தார். அவருடன் சென்ற மற்றையவர் காணாமல் போயுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று வியாழக்கிழமை பிற்பகல் அம்பாந்தோட்டை -குடாவெல்ல - மோதரவத்தையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கடலில் நீராடிய 35 வயது நபரின் சடலமே மீட்கப்பட்டது. இவருடன் சென்ற கம்புறுப்பிட்டியை சேர்ந்த 25 வயது இளைஞர் காணாமல் போயுள்ளார்.

காணாமல் போனவரை தேடும் பணிகள் நேற்றிரவு வரை தொடர்ந்தது. (ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஜனவரி - 26 வெள்ளிக்கிழமை
சோபகிருது வருடம் - தை 12
நல்ல நேரம் : 06.36 - 08.06
ராகு காலம் : 11.06 - 12.36
திதி : பிரதமை




**மேடம்**
குடும்பத்தினருடன் சுப நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். அரசால் ஆதாயம் உண்டு. பூர்வீக சொத்து பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும். சொந்த பந்தங்களின் சுயரூபத்தை அறிந்து கொள்வீர்கள்.

**இடபம்**
கணவன் - மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். எதிர்பாராத இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் வேலையாட்களின் தொந்தரவு குறையும். புதிய வாய்ப்புகள் தேடிவரும்.

**மிதுனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சில விஷயங்களில் திட்டமிட்டது ஒன்றாகவும் நடப்பது ஒன்றாகவும் இருக்கும். பணப்பற்றாக்குறையால் பிறரிடம் கைமாற்றாக வாங்க வேண்டி வரும்.

**கடகம்**
குடும்பத்தினரை அனுசரித்துப் போங்கள். யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள். கொஞ்சம் சிக்கனமாக இருங்கள். அண்டை அயலார் சிலரின் செயல்பாடுகளால் கோபம் எரிச்சல் அடையலாம்.

**சிம்மம்**
தவறு செய்பவர்களை தட்டிக் கேட்பீர்கள். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். உங்களுடைய எதிர்பார்ப்புகளுக்கு தகுந்தாற் போல் ஒருவர் அறிமுகமாவார். வாகன வசதி பெருகும்.

**கன்னி**
தன்னம்பிக்கையுடன் பொது காரியங்களில் ஈடு படுவீர்கள். உறவினர், நண்பர்கள் மத்தியில் அந்தஸ்து உயரும். வீடு வாங்குவது குறித்து யோசிப்பீர்கள். உத்தியோகத்தில் முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள்.

**துலாம்**
குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். பழைய பிரச்னைகளுக்கு தீர்வு காண்பீர்கள். புதிய நட்பால் உற்சாகமடைவீர்கள். புதிய சிந்தனைகள் பிறக்கும். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும்.

**விருட்சிகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் எடுத்த வேலையை முடிக்க முழுமையாக முடிக்க முடியாமல் அவதிக்குள்ளாவீர்கள். உதவி செய்வதாக வாக்குக் கொடுத்தவர்கள் சிலர் இழுத்தடிப்பார்கள்.

**தனுசு**
மறைந்து கிடந்த திறமைகள் வெளிப்படும். பிள்ளைகளின் தேவைகளை பூர்த்தி செய்வீர்கள். வாகனத்தை சரி செய்வீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

**மகரம்**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பளிப்பார்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். சுப நிகழ்ச்சியில் கலந்துக் கொள்வீர்கள். நாடி வந்தவர்களுக்கு உதவி செய்வீர்கள்.

**கும்பம்**
புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். உறவினர்களின் அன்புத் தொல்லை குறையும். அக்கம் - பக்கம் வீட்டாரின் ஆதரவு பெருகும். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும்.

**மீனம்**
எதிர்ப்புகள் அடங்கும். மகளுக்கு நல்ல வரன் அமையும். பால்ய நண்பர்கள் உதவுவார்கள். தாய் வழி உறவினர்களுடன் மனஸ்தாபம் வந்து நீங்கும். உழைப்பால் உயரும் நாள்.

# இன்று இந்திய குடியரசு தினம் தமிழ்நாட்டில் கொண்டாட்டம்!

*சென்னை, ஜன. 26*

இந்தியாவின் 75ஆவது குடியரசு தினம் இன்று வெள்ளிக்கிழமை கொண்டாடப்படுகிறது. சென்னை காமராஜர் சாலையில் உள்ள உழைப்பாளர் சிலை பகுதியில் ஆளுநர் ஆர். என். ரவி இந்திய தேசிய கொடியை ஏற்றி வைத்து அணி வகுப்பு மரியாதையை ஏற்கி றார்.

இந்தியா கடந்த 1950ஆம் ஆண்டு ஜனவரி 26 ஆம் திகதி குடியரசானது. இந்தநாளை ஆண்டுதோறும் குடியரசு தினமாக கொண்டாடப்படுகிறது. அந்த வகையில், இந்தாண்டு குடியரசு தினம் இன்று இந்தியா முழுவதும் கொண்டாடப்படுகிறது.

தமிழக தலைநகர் சென்னையில், மெரினா கடற்கரையில் உள்ள காமராஜர் சாலையில் உழைப்பாளர் சிலை பகுதியில் அருகே அமைக்கப்பட்டுள்ள கொடிமரத்தில், காலை 8 மணிக்கு ஆளுநர் ஆர். என். ரவி இந்திய தேசிய கொடியை ஏற்றி வைக்கிறார்.

தொடர்ந்து, முப்படையினர், காவல்துறையினர், தேசிய மாணவர் படை, பல்வேறு காவல் பிரிவினர், வனம் மற்றும் தீயணைப்பு படையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொள்கிறார்.

இதைத்தொடர்ந்து, பல்வேறு கலைக்குழுக்களின் நடன, நாட்டிய நிகழ்ச்சிகள், பள்ளி, கல்லூரி மாணவிகளின் ஆடல் பாடல் நிகழ்ச்சிகளும் நடத் தப்படுகின்றன. இதையடுத்து, முப்படைகளின் கவச வாகனங்கள், தமிழகத்தின் பல்வேறு துறைகளின் திட்ட விளக்கங்கள் அடங்கிய 21 அணிவகுப்பு வாகனங்கள் வலம் வரும்.

இதைத்தொடர்ந்து, மத நல்லிணக்கத்துக்கான கோட்டை அமீர் விருது, திருத்திய நெல் சாகுபடிக்கான விருதுகள், மதுவிலக்கு தொடர்பான காந்தியடிகள் விருதுகள் உள்ளிட்ட விருதுகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்குகிறார். குடியரசு தினத்தை முன்னிட்டு, நேற்று வரை 3 முறை அணிவகுப்பு மரியாதை ஒத்திகைகள் நடத் தப்பட்டுள்ளன. (ஐ)

# மகாத்மா காந்தியை இழிவுபடுத்திய ஆளுநர் மன்னிப்பு கேட்கவேண்டும்!

## வைகோ அறிக்கை



*சென்னை, ஜன. 26*

மகாத்மா காந்தியை இழிவு படுத்திய ஆளுநர் ஆர். என். ரவி மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று ம. தி. மு. க. பொதுச் செயலாளர் வைகோ வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக வைகோ வெளியிட்டுள்ள அறிக்கையில்,


"சென்னை அண்ணா பல்கலைக் கழகத்தில் நடந்த நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் 127ஆவது பிறந்தநாள் விழாவில் தமிழக ஆளுநர் ஆர்.என். ரவி கலந்துகொண்டு, நேதாஜிக்கு பெருமை சேர்க்கிறோம் என்ற பெயரில், மாவீரர் நேதாஜியின் வரலாற்றையே சிறுமைப்படுத்தி பேசியிருக்கிறார். இரண்டாம் உலகப் போருக்குப் பின்பு 1942இல் மகாத்மா காந்தி தொடங்கிய 'வெள்ளையனே வெளியேறு' இயக்கம் பெரிதாக எதையும் சாதித்து விடவில்லை. நேதாஜி உருவாக்கிய இந்திய தேசிய இராணுவம், பிரிட்டிஷ் அரசை எதிர்த்துப் போரிட்டதால்தான் ஆங்கிலேயர்கள் நாட்டுக்கு விடுதலை அளிக்கின்ற நெருக்கடிக்கு உள்ளானார்கள் என்று ஆளுநர் தனது உரையில் குறிப்பிட்டு இருப்பது கடும் கண்டனத்திற்கு உரியது.

இந்திய விடுதலைப் போராட்ட வரலாறு, மகாத்மா காந்தியின் தியாக சரித்திரம், மாவீரர் நேதாஜி நடத்திய ஆயுதம் தாங்கிய போராட்டம் குறித்து ஆளுநர் ஆர். என். ரவிக்கு எவ்வித வரலாற்று அறிவும் இல்லை என்பதை அவருடைய உரை வெளிப்படுத்தி இருக்கிறது. இந்திய தேசிய இராணுவத்துக்கு ஜேர்மனியில் ஆதரவு திரட்டும் முயற்சியில் நேதாஜி ஈடுபட்டிருந்த பொழுது, ஹிட்லருக்கு அடுத்த தலைவரான கோயரிங் "மகாத்மா காந்தி பிரிட்டிஷாருக்கு எதிரான கருத்து கொண்ட போல்ஷ்விக் கையாள்" என்று குற்றம் சாட்டிய போது நேதாஜி கடும் கண்டனம் தெரிவித்தார்.

இந்திய விடுதலைப் போராட்டத்தில் எள் முனை அளவு கூட பங்கேற்காத இந்துத்துவ தலைவர்களின் வாழ்க்கை வரலாற்றை பெருமிதத்துடன் பறைசாற்றும் ஆர். என். ரவியிடம் இதையெல்லாம் எதிர்பார்க்க முடியாதுதான். ஆர். எஸ். எஸ்- இன் பிரசாரகராக ஆளுநர் மாளிகையில் இருந்து கொண்டு தேசபிதா மகாத்மா காந்தியை இழிவு படுத்திய ஆளுநர் ஆர். என். ரவி மன்னிப்பு கேட்க வேண்டும்"- என்றுள்ளது. (ஐ)

# தியாகிகளைக் கண்டுகொள்ளாமல் கருணாநிதியை உயர்த்துகிறது தி. மு. க.!

## நாம் தமிழர் சீமான் சாடல்



*உடுமலை, ஜன. 26*

"மொழிப்போரை வைத்து ஆட்சிக்கு வந்த தி.மு.கவினர் தியாகிகளை கண்டு கொள்ளாமல் கருணாநிதி பெயரை தூக்கிப்பிடித்து வருகின்றனர்", என சீமான் பேசினார்.

உடுமலையில், நாம் தமிழர் கட்சி சார்பில், மொழிப்போர் தியாகிகள் வீர வணக்க நாள் பொதுக்கூட்டத்தில் பேசிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழை வைத்து, மொழிப் போரை வைத்து ஆட்சிக்கு வந்தவர்கள், அதனை கண்டு கொள்ளவில்லை. மொழிப் போர் தியாகிகளுக்கு தி. மு. க., அரசு, எந்த விதமான நினைவு அரங்கங்களும் அமைக்கவில்லை. ஆனால், கருணாநிதி பெயரை அனைத்துக்கும் வைக்கின்றனர். எங்கும் தமிழ் இல்லை திராவிட ஆட்சிகளால், தமிழினம் அழிக்கப்படுகிறது.

இலஞ்சம், ஊழல், மது திணிப்பு என அனைத்தையும் சகித்துக்கொள்வதால், அவர்கள் குடும்பம் பல தலைமுறைகளுக்கும் சொத்து சேர்த்து வைத்து, குடும்பம் ஆள்கிறது. கட்சியினர் அடிமைகளாக உள்ளனர். எந்த மொழியையும் கற்பது தவறில்லை தாய் மொழியில் பேச வேண்டும் உணர்வுடன் இருக்க வேண்டும். சின்னத்தை பார்த்து வாக்களிக்கக் கூடாது எண்ணத்தை பார்த்து வாக்களிக்கும் நிலை வர வேண்டும். சமச்சீர் பாடத்திட்டம் உள்ளது; ஆனால், தமிழகத்தில், சமச்சீர் கல்வி இல்லை. மதுக் கடையை அரசு நடத்துகிறது. ஆனால், கல்வியை வியாபாரமாக்கியுள்ளது - என்றார். (ஐ)

# தமிழ்க் கட்சிகளினால்தான் 13ஆவது திருத்தம் பலவீனம்

## நீதி அமைச்சர் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 26

**“தமிழ்க் கட்சிகளால்தான் 13ஆவது திருத்தம் பலவீனமடைந்தது. 13ஆவது திருத்தம் தற்போது வழங்கும் அதிகாரங்களைக்கூட தமிழ்க் கட்சிகள் சரிவரப் பயன்படுத்தவில்லை என்பதே உண்மை.”**

இவ்வாறு நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

“13ஆவது திருத்தத்தில் உள்ள அதிகாரங்கள் போதாது என்றும், கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்றும் தமிழ்த் தேசியக் கட்சிகள் தொடர்ச்சியாக வலியுறுத்துகின்றன. 13ஆவது திருத்தம் இன்று நலினமடைந்திருக்கின்றது என்பது உண்மைதான். ஆனால், 13ஆவது திருத்தத்தில் தற்போது குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரங்களைக்கூட தமிழ்க் கட்சிகள் உரிய முறையில் சரிவரப் பயன்படுத்தவில்லை என்பதையும் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் வடக்கு மாகாண முதலமைச்சராக இருந்தபோது, அவருக்கும் இதர உறுப்பினர்களுக்கும் இடையிலான கருத்து மோதல்களுக்கும் அரசியல் முரண்பாட்டுக்கும்தான் தமிழ்க் கட்சிகள் முக்கியத்துவம் வழங்கிச் செயற்பட்டனவே அன்றி, 13ஆவது திருத்தத்தின் கீழ் மாகாணங்களுக்கு வழங்கப்பட் டுள்ள அதிகாரங்களையாவது உரிய முறையில் பயன்படுத்த எத்தனிக்கவில்லை.

இதனால்தான் வடக்கு மாகாணத்துக்காக மத்திய அரசால் ஒதுக்கப்பட்ட நிதி, செலவிடப்படாமல் மீளத் திரும்பியது. கிழக்கு மாகாணத்திலும் இதேபோன்றதொரு நிலையே இருந்தது. ஆக, இருக்கும் அதிகாரங்களைக்கூட சரிவரப் பயன்படுத்தாமலிருந்துவிட்டு கூடுதல் அதிகாரங்களைத் தாருங்கள் என்று கேட்பது பொருத்தமற்றது.” - என்றார்.

# மீனவர் நலன்புரி செயல்பாடுகளை மேம்படுத்த புதிய வேலைத்திட்டம்!

கொழும்பு, ஜன. 26

மீனவர்களின் ஆரோக்கியம் மற்றும் நலன்புரி செயற்பாடுகளை மேம்படுத்தும் வகையில் ‘தீவர சுவ சவிய’ என்ற புதிய வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்த தெரிவித்தார்.

இதன் முதற்கட்ட வேலைத்திட்டம் வென்னப்புவ, வெல்லமங்கரய மீன்பிடித் துறைமுகத்தில் எதிர்வரும் 26ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடலுக்கு மீன்பிடிக்கச் செல்லும்போது மீனவர்கள் பாரிய சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

மீனவர்கள் திடீரென நோய் வாய்ப்பட்டால் அவர்களுக்கு முதலுதவி அளிப்பதில் சவால்கள் இருக்கின்றன.

சில நேரங்களில் நோய்வாய்ப்பட்ட மீனவர்களுக்கு சிகிச்சை அளிக்க, நடுக்கடலில் வெளிநாடுகளின் உதவியையும் பெற வேண்டிய தேவை ஏற்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்தநிலைமைகள் அனைத்தையும் கருத்திற் கொண்டு, மீனவ சமூகத்தின் ஆரோக்கியத்தையும் நலனையும் மேம்படுத்துவதற்காக செயல்படுத்தப்படும் மிகப் பாரிய திட்டமாக ‘தீவர சுவ சவிய’ வேலைத்திட்டம் அமையவுள்ளதாகவும் கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்த மேலும் தெரிவித்தார்.

(அ)

# மற்றொரு விகாரையில் சூடு!

கொழும்பு, ஜன. 26

குருநாகல், தொடம்கஸ்லந்த - உடத்தபொல புராதன விகாரையில் நேற்று முன் தினம் இரவு துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

விகாரை பீடாதிபதி கல்னாவே பன்னகிட்டி தேரரின் வரவேற்பறையில் உள்ள ஜன்னல் ஒன்றின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட போதிலும், பன்னகிட்டி தேரர் அப்போது விடுதியில் வேறு இடத்தில் உறங்கிக் கொண்டிருந்ததால் அவருக்கு எந்த பாதிப்பும் ஏற்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை நேற்றுமுன் தினம் விகாரையொன்றில் இடம்பெற்ற துப்பாக்கி சூட்டுச் சம்பவத்தில் பௌத்த பிக்கு ஒருவர் உயிரிழந்துள்ள நிலையில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (அ)

# இந்தியாவை எதிர்க்கும் மாலைதீவு ஜனாதிபதிக்கு விமல் பாராட்டு!

கொழும்பு, ஜன. 26

இந்திய அழுத்தங்களுக்கு அடிபணியாமல் செயற்படும் மாலைதீவு ஜனாதிபதிக்குள்ள முதுகெலும்பு இங்குள்ள ஆட்சியாளர்களுக்கு இல்லை” - என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

“ உலகில் பிரிக்ஸ் கூட்டணி உள்ளது, பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென்னாபிரிக்கா ஆகிய நாடுகள் இக் கூட்டணியில் அங்கம் வகிக்கின்றன, மேலும் சில நாடுகளும் இணைத்துக்கொள்ளப்பட வுள்ளன. இந்த பிரிக்ஸ் கூட்டணியுடன் உறவை வலுப்படுத்த வேண்டும். பிரிக்ஸ் வங்கியொன்றைக்கூட ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த கூட்டணியுடன் செயற்படக்கூடிய தலைவர் ஒருவரை தெரிவு செய்ய வேண்டும்.

இந்தியாவின் தாளத்துக்கேற்ப ஆடாத ஒருவர் மாலைதீவு ஜனாதிபதியாக வந்துள்ளார், இதனால் மாலைதீவை புறக்கணிப்போம் என்ற பிரசாரம் இந்தியாவில் முன்னெடுக்கப்படுகின்றது. இந்திய சுற்றுலாப் பயணிகள் மாலைதீவு செல்வதை நிறுத்தியுள்ளனர்.

இந்நிலையில் மாலைதீவு ஜனாதிபதி சீனாவுக்கு சென்று, அந்நாட்டு ஜனாதிபதியை சந்தித்து, அதிகளவு சீன சுற்றுலாப் பயணிகளை அனுப்புமாறு கோரியுள்ளார். இந்திய அழுத்தத்துக்கு மாலைதீவு ஜனாதிபதி அடிபணியவில்லை, மண்டியிடவில்லை, மாலைதீவு ஜனாதிபதிக்குள்ள முதுகெலும்பு இங்குள்ள ஆட்சியாளர்களுக்கு இல்லை.” - என்றார். (அ)

# முட்டை விலை உயரும்

கொழும்பு, ஜன. 26

உள்ளூர் முட்டை ஒன்றின் விலையை 3.00 ரூபாயால் அதிகரிக்க அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது.

வற் வரி அதிகரிப்பினால் உள்ளூர் முட்டை உற்பத்திச் செலவு 8.00 ரூபாயினால் அதிகரித்துள்ள நிலையில், முட்டை ஒன்றின் விலை 3.00 ரூபாயினால் மட்டுமே அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும், சங்கத்தின் தலைவர் சரத் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அதன்படி, கோழிப்பண்ணையில் இருந்து 45 ரூபாய்க்கு விற்கப்படும் உள்ளூர் முட்டை ஒன்றின் மொத்த விலை 48 ரூபாயாக அறவிடப்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.(அ)

# ஈ.பி.டி.பியின் கொள்கைகளை ஏற்று தமிழ் கட்சிகள் செயல்படுகின்றன

## இப்படி சொல்கிறார் ரங்கேஸ்வரன்

வடமராட்சி, ஜன. 26

ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் கொள்கைகளை ஏற்று தமிழ் கட்சிகள் செயல்படுகின்றன என்று அந்தக் கட்சியின் ரங்கேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மேலும், புதிய இந்திய தூதுவரை சந்தித்த அனைத்துத் தமிழ் கட்சிகளும் 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த இந்தியா அழுத்தம் கொடுக்கவேண்டும், தமிழ் மக்களுடைய பிரச்னை தீர்வில் இந்தியா தலையிட வேண்டும் என்று கோரியிருப்பது தமது நீண்டகால கோரிக்கையை ஏற்றுக்கொண்டே.

- இவ்வாறு நேற்று முன் தினம் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

வடமராட்சி ஊடக இல்லத்தில் நடந்த இந்த செய்தியாளர் சந்திப்பில்,

ஈழ மக்கள் ஜனநாயக கட்சி நீண்டகாலமாக வலியுறுத்தி வந்திருக்கின்ற அரசியல் தீர்வை அல்லது அரசியல் வழிகாட்டலை இன்று தமிழ் கட்சிகள் ஏற்றுள்ளன. தமிழ் மக்களின் பிரச்னைக்கான தீர்வை நோக்கி எங்களுடன் சேர்ந்து பயணிப்பதில் அல்லது எங்களுடைய கருத்துகளுடன் இணக்கப்பாட்டுக்கு வந்ததையிட்டு நாங்கள் இந்த இடத்திலே பெருமை அடைகின்றோம்.

இதேநேரம், அண்மையில், பாராளுமன்றத்தில் நீதி அமைச்சரும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் பொதுச் செயலாளர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் ஒரு விவாதத்தில் கலந்து கொண்டிருந்தபோது மலையக மக்களுடைய வாக்குரிமை விடயத்தில் தன்னுடைய பேரனார் ஜீ. ஜீ. பொன்னம்பலம் எந்த சந்தர்ப்பத்திலும் அவர்களுக்கு எதிராக நடந்து கொள்ளவில்லை என்ற செய்தியை சொல்லியிருக்கிறார்.

1949ஆம் ஆண்டு ஜீ. ஜீ. பொன்னம்பலம் மலையக மக்களின் வாக்குரிமையையும் அவர்களின் பிரஜா உரிமைகளையும் பறிப்பதற்காக அரசுக்கு ஆதரவாக செயல்பட்டார் என்ற முழுமையான ஆதாரம் எங்களிடம் இருக்கிறது. தேவை ஏற்படும்போது அந்த ஆதாரங்களை வெளியிட்டு நிரூபிக்க தயாராக இருக்கிறோம்.

இணையவழி நிகழ்நிலை சட்டங்கள் சம்பந்தமாக பல்வேறு தரப்புகள் பல்வேறு விதமான கருத்துகளை சொல்லி வருகிறார்கள்.

(ஐ-02)

# பிரதி பொலிஸ்மா அதிபரானார் பொலிஸ் பேச்சாளர் நிஹால்!

கொழும்பு, ஜன. 26

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ குற்றப் பிரிவுக்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபராக உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

அதேவேளை தாம் பொலிஸ் ஊடகப்பேச்சாளராக தொடர்ந்தும் செயற்படுவதாக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ குறிப்பிட்டார்.

பதில் பொலிஸ் மா அதிபர் தேஷபந்து தென்னக்கோன் இந்த நியமனத்தை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# இந்த ஆண்டில் மட்டும் 46 இந்திய மீனவர் கைது!

கொழும்பு, ஜன. 26

கடந்த 24 நாட்களில் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளுக்காக 46 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், 8 இந்திய மீன்பிடி படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று கடற்படையின் பேச்சாளர் கப்டன் கயான் விக்ரமசூரிய தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள், சட்ட நடவடிக்கைகளுக்காக கடற்றொழில் பரிசோதகரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

(ஐ)

# விபத்தில் தந்தை, மகன் பலி; தாய் ஆபத்தான நிலையில்!

கொழும்பு, ஜன. 26

கொழும்பு, லபுகமவில் இடம்பெற்ற வீதி விபத்தில தந்தையும் மகனுகம் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, இந்தவிபத்தில் காயமடைந்த தாய் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

தந்தை, மகன் மற்றும் தாயார் ஆகியோர் பயணித்த மோட்டார் சைக்கிளும் லொறியும் மோதியே குறித்த விபத்து சம்பவித்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

விபத்து தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பாடசாலை ஆசிரியர்கள் பற்றாக்குறையை பெப்ரவரி இறுதிக்குள் தீர்க்க நடவடிக்கை

## அமைச்சர் சுசில் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 26

**நாடு முழுவதும் நிலவிவரும் ஆசிரியர் பற்றாக்குறை பிரச்சினையை எதிர்வரும் பெப்ரவரி மாதம் இறுதியாகும் போது தீர்த்துக்கொள்ள முடியுமாகும். அதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பட்டதாரிகள் 22ஆயிரம் பேரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்தபோது அது தொடர்பில் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கு 9 மாதங்களாக விசாரணை செய்து கடந்த வாரமே அது முடிவுக்கு வந்தது.அடுத்த வாரமாகும்போது நீதிமன்ற உத்தரவு கிடைக்கும் என எதிர்பார்க்கிறோம்.

அதேபோன்று 13ஆயிரத்தி 500பேரை இணைத்துக்கொள்வதற்காக மாகாணசபைகள் நடவடிக்கை எடுத்திருக்கின்றன. அது தொடர்பில் நீதிமன்றில் எழுத்து மூல உத்தரவு இருக்கின்றன.

மேலும் 5500 பேருக்கு ஆசிரியர் நியமனம் வழங்குவதற்கான வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்படு தற்போது பரீட்சை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. பெப்ரவரி மாதம் இறுதியாகும் போது ஆசிரியர் பற்றாக்குறை பிரச்னைக்கு தீர்வு காண முடியும் - என்றார். (அ)

# சீனி வரி மோசடி குறித்த விசாரணைகள் நிறைவு

கொழும்பு, ஜன. 26

சீனி வரி மோசடி குற்றச்சாட்டு தொடர்பில் குற்றப் புலனாய்வு திணைக்களம் விசாரணைகளை நிறைவு செய்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

விசாரணையின் கோப்புகள் சட்ட மா அதிபரின் ஆலோசனைக்காக அனுப்பி வைக்கப்பட்டதாகவும் அதற்கான பதில் கிடைத்துள்ளதாகவும் அவர் கூறினார்.

மோசடி தொடர்பாக வழக்குத் தொடர்வதற்கான ஆலோசனையைப் பெறவே இவ்வாறு செய்யப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, 6 நிறுவனங்களிலிருந்து பெற்ற இலாபத்தில் 31 கோடி ரூபாவை மீளப் பெற்றுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

சீனி வரி மோசடி தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பாராளுமன்றத்தில் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார். (அ)

# வெளிநாட்டு பிரஜை சடலமாக மீட்பு!

கொழும்பு, ஜன. 26

கொழும்பு கொம்பனித்தெரு எல்டெயார் நவீன அடுக்குமாடி கட்டடத்தின் ஐந்தாவது மாடியில் சடலமொன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு பிரஜை ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கட்டடத்தின் ஐந்தாவது மாடியில் தோட்டத்தை சுத்தம் செய்யச் சென்ற தொழிலாளி ஒருவர் குறித்த வெளிநாட்டவர் விழுந்து கிடப்பதை கண்டுள்ளார்.

உடனடியாக செயற்பட்ட ஊழியர் இது தொடர்பில் கொம்பனித்தெரு பொலிஸாருக்கு அறிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் உயிரிழந்தவரின் உறவினர் ஒருவர் வரும் வரை சடலத்தை பொலிஸ் பிரேத அறையில் வைக்குமாறு கோட்டை நீதவான் திலின கமகே உத்தரவிட்டுள்ளார்.(அ)

# விவசாயிகளுக்கு கடந்த வருடம் ஏற்பட்ட பயிர்ச் சேதம் குறித்து அறிக்கை கோரல்

கொழும்பு, ஜன. 26

கடந்த வருட வெள்ளப் பெருக்குக் காரணமாக கடந்த வருடத்தில் ஏற்பட்ட பயிர்களுக்கான சேதம் குறித்த அறிக்கையை ஒரு மாத காலத்துக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு பாராளுமன்ற வழிவகைகள் பற்றிய குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக ரணவக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கினார்.

நில்வளா கங்கையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு குறித்த விடயம் தொடர்பில் ஆராயும் நோக்கில் பாராளுமன்ற வழிவகைகள் பற்றிய குழு கூடிய போதே அதன் தலைவர் இந்த அறிவுறுத்தலை வழங்கினார்.

இந்த அமர்வுக்கு நீர்ப்பாசனத் திணைக்களம், மத்திய சுற்றாடல் அதிகாரசபை, மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகம், இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனம், தென் மாகாண நீர்வழங்கல் சபை, மாத்தறை மாவட்ட செயலாளர் மற்றும் சம்பந்தப்பட்ட துறைசார் நிபுணர்கள் அழைக்கப்பட்டிருந்தனர்.

2023 ஆண்டு நில்வளா கங்கையை அண்மித்த பகுதியில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு நில்வளா பள்ளத்தாக்கில் ஏற்பட்ட இயற்கையான நிலைமையா அல்லது அமைக்கப்பட்ட உப்பு நீர் தடுப்பு அணையினால் ஏற்பட்ட நிலைமையா என்பது குறித்து குழுவின் தலைவர் வினவினார்.

மக்களின் குடிநீர் வசதிக்காக அமைக்கப்பட்ட உப்பு நீர் தடுப்பணை இந்த வெள்ள நிலைமைக்கு நேரடிக் காரணம் என்பது இங்கு தெரியவந்ததுடன், வெள்ளப்பெருக்குக் காரணமாக கடந்த வருடத்தில் ஏற்பட்ட பயிர்களுக்கான சேதம் குறித்த அறிக்கையை ஒரு மாத காலத்துக்குள் குழுவிடம் சமர்ப்பிக்குமாறும் குழுவின் தலைவர், மாத்தறை மாவட்ட செயலாளருக்குப் பணிப்புரை விடுத்தார்.

உப்பு நீர் தடுப்பு அணைக்கு மேலதிகமாக மோசமான கால நிலை காரணமாக ஏற்பட்ட அதிக மழைவீழ்ச்சி, நில்வளா கங்கையின் படுகையில் சகதி படிந்தமை, பழைய உப்பு நீர் தடுப்பணை அகற்றப்படாமையால் இரண்டு தடுப்பணைகள் உருவாகியமை மற்றும் மணல் தடுப்புக்கள் அகற்றப்படாமை போன்றவை இந்த வெள்ள சூழ்நிலைக்குக் காரணமாக அமைந்ததாகவும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டது. (அ)

# கைது செய்யப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களின் விசாரணை ஒத்திவைப்பு!

மட்டக்களப்பு, ஜன. 26

மட்டக்களப்பு - மயிலத்தமடு மாதவனை மேய்ச்சல் தரை தொடர்பான பிரச்னைக்கு தீர்வு கோரி முன்னெடுக்கப்படும் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்த போது, கைது செய்யப்பட்ட 6 பல்கலைக்கழக மாணவர்கள் குறித்த விசாரணையை நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது.

இது தொடர்பான வழக்கு, ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற நீதவான் தர்சினி அன்னாத்துரை முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது, பொலிஸ் தங்களது சமர்ப்பணங்களை முன்வைத்திருந்து.

அது தொடர்பில், ஆராய்ந்த நீதவான், குறித்த வழக்கு விசாரணைகளை எதிர்வரும் மார்ச் மாதம் 4ஆம் திகதி எடுத்துக் கொள்வதற்கு உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை, மட்டக்களப்பு செங்கலடி பகுதிக்கு ஜனாதிபதி ரணில் ரணில் விக்ரமசிங்கவின் வருகையின் போது வீதியை மறித்து ஆர்ப்பாட்டம் ஈடுபட்டதாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் 37 பேருக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு விசாரணைகள் எதிர்வரும் மார்ச் மாதம் 4ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (அ)

# கணக்காய்வாளர் திணைக்களத்தில் 400 பதவிகளுக்கு வெற்றிடங்கள்

கொழும்பு, ஜன. 26

கணக்காய்வு அதிகாரிகளுக்கான சுமார் 400 பதவி வெற்றிடங்கள் காணப்படுவதாக கணக்காய்வாளர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக கணக்காய்வு நடவடிக்கைகளை அதிக பட்ச முகாமைத்துவத்துடன் மேற்கொள்ள வேண்டியுள்ளதாக, கணக்காய்வாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

கணக்காய்வு அதிகாரி பதவிக்கு பொருத்தமானவர்களை இணைத்துக்கொள்ளும் நடவடிக்கை விரைவில் மேற்கொள்ளப்படும். அதற்கமைய, உரிய தகுதிகளுடன் தற்போது அரச சேவையில் ஈடுபட்டுள்ள பட்டதாரிகளிடமிருந்து இதற்கான விண்ணப்பங்கள் கோரப்படவுள்ளது.

இதற்கான வர்த்தமானி விரைவில் வெளியிடப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ)

# கொட்டாஞ்சேனையில் துப்பாக்கிப் பிரயோகம்

## காயமடைந்த நபர் வைத்தியசாலையில்

கொழும்பு, ஜன. 26

கொழும்பு, கொட்டாஞ்சேனை - ஜிந்துபிட்டி பிரதேசத்தில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்று முன் தினம் இரவு 9.30 அளவில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் காயமடைந்த நபர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளந்தெரியாத இருவர் துப்பாக்கிப் பிரயோகத்தினை மேற்கொண்டு தப்பிச் சென்றுள்ளதாக குறிப்பிடப்படுகிறது. (அ)

# சுகாதாரத்துறையின் எதிர்கால மேம்பாட்டுக்கு ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்திடமிருந்து உதவி

கொழும்பு, ஜன. 26

இலங்கையில் சிகிச்சை முறைமைகள், டெங்கு ஒழிப்பு உள்ளிட்ட சுகாதார சேவைகளுக்குத் தேவையான நவீன மருத்துவ உபகரணங்களை வழங்குமாறு சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண, ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி வேலைத் திட்டத்திடம் கோரியுள்ளார்.

சுகாதாரம் மற்றும் கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரண மற்றும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி அசுசா குபோடா ஆகியோருக்கிடையில் இடம்பெற்ற சந்திப்பின் போதே இவ்விடயம் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

இலங்கையின் சுகாதாரத் துறையின் எதிர்கால மேம்பாட்டுக்காக நவீன தொழிநுட்பத்தைப் பயன்படுத்துவது தொடர் பில் இதன் போது நீண்ட கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

இலங்கையில் டெங்கு நுளம்புகள் பரவும் வீதம் சற்று அதிகரித்துள்ளதால், அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கும், நுளம்புகள் பெருகும் இடங்களைக் கண்டறிவதற்கும், அவற்றை அழிப்பதற்கு தேவையான உபகரணங்களைப் பயன்படுத்துவதற்கும் நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவது அவசியமாகும். அதற்கமைய இதற்கான நவீன தொழிநுட்ப கருவிகளை வழங்குமாறு சுகாதார அமைச்சர், அசுசா குபோடாவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கையில் உள்ள முதியோர் மற்றும் ஊனமுற்றோரின் சிகிச்சைச் சேவைகளுக்கான சுகாதாரப் பராமரிப்பின் செயல்திறன் மற்றும் துரிதத்தன்மையை அதிகரிக்க நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவது குறித்தும், நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களை விரைவுபடுத்தும் முறைகள் குறித்தும் இதன் போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

உலக சுகாதார ஸ்தாபனம், ஆசிய அபிவிருத்தி வங்கி, எய்ட்ஸ், காசநோய் மற்றும் மலேரியாவை எதிர்த்துப் போராடுவதற்கான உலகளாவிய நிதியம் போன்ற நிறுவனங்கள் தேவையான ஆதரவை வழங்குவதற்காக திறமையான மற்றும் வெளிப்படையான கொள்முதல் செயல்முறையில் ஈடுபட்டுள்ளதாக அசுசா இதன் போது அமைச்சரிடம் தெளிவுபடுத்தினார்.

இது தொடர்பில், சுகாதார அமைச்சின் மானியங்கள் மற்றும் சர்வதேச உறவுகளின் ஒருங்கிணைப்பாளர் வைத்தியர் அன்வர் ஹம்தானிக்கு, ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தித் திட்டம் மற்றும் சுகாதாரத் துறையின் தொடர்புடைய துறைகளுடன் தொடர்ந்து தொடர்பில் இருக்குமாறு சுகாதார அமைச்சர் அறிவுறுத்தல்களை வழங்கினார். (அ)

ஈழநாடு



# மக்களின் குரல்களை நசுக்காமல் இருப்பதை உறுதி செய்யவேண்டும்!

## இலங்கையை வலியுறுத்தும் அமெரிக்கா

**கொழும்பு, ஜன. 26**

**நிகழ்நிலை பாதுகாப்பு சட்டத்தை இலங்கை நிறைவேற்றியமைக்கு இலங்கை கவலை வெளியிட்டுள்ளது. அத்துடன், வெளிப்படைத்தன்மைக்கு முன்னுரிமை அளிக்குமாறும் எந்தவொரு சட்டமும் மக்களின் குரல்களை நசுக்காமல் இருப்பதை உறுதி செய்யுமாறும் அந்த நாடு வலியுறுத்தியுள்ளது.**

நிகழ்நிலை பாதுகாப்பு சட்டம் நேற்று முன்தினம் 46 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. இந்த நிலையிலேயே அமெரிக்கா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

இது குறித்து இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தனது எக்ஸ் தளத்தில் குறிப்பிட்டுள்ளதாவது,

“ சிவில் சமூகம் மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்கள் உள்ளிட்ட முக்கிய பங்குதாரர்களின் கோரிக்கைகளை உள்ளடக்காமல் பாராளுமன்றில் நேற்று (நேற்று முன்தினம்) நிறைவேற்றப்பட்ட இலங்கையின் நிகழ்நிலை காப்புச் சட்ட மூலத்தின் சாத்தியமான தாக்கம் குறித்து அமெரிக்கா கவலை கொண்டுள்ளது.

ஜனநாயக விழுமியங்களை ஆபத்தில் தள்ளுவதுடன் தெளிவற்ற மற்றும் மிகையான கடுமையான சட்டங்கள் முதலீடு மற்றும் டிஜிற்றல் பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கு இடையூறாக அமையும் என்பதுடன்



இலங்கையின் பொருளாதார வளர்ச்சியைக் குறைமதிப்புக்கு உட்படுத்தும்.

வெளிப்படைத்தன்மைக்கு முன்னுரிமை அளிக்குமாறும் எந்தவொரு சட்டமும் மக்களின் குரல்களை நசுக்காமல் இருப்பதை உறுதி செய்யுமாறும் இலங்கையை அமெரிக்கா வலியுறுத்துகிறது - என்றுள்ளது. (ஐ)

# ‘யுக்திய’ நடவடிக்கையில் 838 பேர் கைதாகினர்!

கொழும்பு, ஜன. 26

நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட ‘யுக்திய’ நடவடிக்கையின் போது கடந்த 24 மணி நேரத்தில் 838 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இதில், போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடைய 549 சந்தேக நபர்களும் ஏனைய குற்றங்களுடன் தொடர்புடைய 289 சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், போதைப் பொருள் கடத்தலுடன் தொடர்புடைய 549 பேரில் 5 பேருக்கு எதிராக விசாரணை முன்னெடுக்கப்பட்டு வருகிறது. அத்துடன், போதைப்பொருளுக்கு அடிமையான 10 பேர் புனர்வாழ்வு மையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இதன்போது பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவு மற்றும் விசேட பணியகத்தால் தேடப்பட்டு வரும் பட்டியலில் இருந்த 14 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஏனைய குற்றங்கள் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட 289 சந்தேக நபர்களில் 35 பேர் போதைப்பொருள் குற்றங்கள் தொடர்பில் திறந்த பிடியாணை பெற்றுள்ள நிலையில் 246 பேர் ஏனைய குற்றங்கள் தொடர்பில் திறந்த பிடியாணை பெற்றுள்ளனர் என்று விசாரணையில் தெரியவந்துள்ளது.

யுக்திய நடவடிக்கையின் போது மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனையில் 211 கிராம் ஹெரோயின் போதைப் பொருள், 78 கிராம் ஐஸ் போதைப்பொருள், 16 கிலோ 600 கிராம் கஞ்சா, 9,974 கஞ்சா இலைகள் , 1,192 போதை மாத்திரைகள், 493 கிராம் மாவா போதைப்பொருள் மற்றும் 36 கிராம் மதனமோதகம் உள்ளிட்ட போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# மிகிந்தலை மகாநாயக்க தேரருக்கு உயிரச்சுறுத்தல் விடுத்தவர் கைது!

கொழும்பு, ஜன. 26

மிகிந்தலை ரஜமஹா விகாரையின் மகாநாயக்க தேரருக்கு உயிர் அச்சுறுத்தல் விடுத்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

51 வயதுடைய சந்தேக நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டவராவார்.

குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் இந்த மேற்கொள்ளப்பட்டுள்ளது. சந்தேக நபர் ஒரு கோடி ரூபாய் கப்பம் கோரி தேரருக்கு அச்சுறுத்தல் விடுத்துள்ளார்.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணையினை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்தில் மீண்டும் மோதல்; 50 பேர் தப்பித்தனர்!

கொழும்பு, ஜன. 26

கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்தில் இரு குழுக்களுக்கு இடையே மீண்டும் மோதல் சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது. இதையடுத்து அங்கிருந்து 50 பேர் வரை தப்பிச் சென்றுள்ளனர். எனினும், அவர்களில் சிலர் மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று புனர்வாழ்வு நிலைய ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

நிலைமையை கட்டுப்படுத்த பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

இரு குழுக்கழுக்கு இடையிலான மோதலின் பின்னரே கைதிகள் தப்பிச் சென்றனர் என்று புனர்வாழ்வு நிலையத்தின் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

கந்தகாடு புனர்வாழ்வு மையத்தில் அண்மையில் இரு குழுக்களுக்கு இடையே ஏற்பட்ட மோதலில் பலர் தப்பி சென்று பின்னர் மீண்டும் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பிள்ளைகளை வீட்டுக்குள் பூட்டிவிட்டு யாத்திரை சென்ற பெற்றோர் கைது!

கொழும்பு, ஜன. 26

தங்களின் மூன்று பிள்ளைகளைகளை வீட்டுக்குள் வைத்து பூட்டிவிட்டு சிவனொளிபாத மலைக்கு யாத்திரை சென்ற பெற்றோரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

8, 5 மற்றும் 3 வயதுடைய சிறுவர்களே இவ்வாறு வீட்டுக்குள் வைத்துப் பூட்டப்பட்டிருந்தனர். குருநாகல் - குளியாப்பிட்டியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பொலிஸ் அவசர சேவை (119) ஊடாக அயலவர்களிடமிருந்து பெறப்பட்ட தகவலின் அடிப்படையில் சிறுவர்களை பொலிஸார் மீட்டனர்.

சிறுவர்கள் மீட்கப்பட்ட போது மூவரும் காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருந்தனர். மூன்று குழந்தைகளுக்கும் பிஸ்கட், ரொட்டி போன்றவற்றை வைத்து விட்டு, பெற்றோர்கள் புனித யாத்திரை சென்றுள்ளனர் என்று விசாரணையில் தெரிய வந்துள்ளது.

வீடு திரும்பிய பெற்றோரை, பொலிஸார் கைது செய்ததுடன் தாயை குழந்தைகளை பராமரிக்கவும் வைத்தனர்.

கைதானவர்களை நீதிமன்றில் முற்படுத்தவும் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

# இரத்தக்கறை படிந்த வாள்களுடன் ஓட்டோவில் பயணித்த 6 பேர் கைது!

கொழும்பு, ஜன. 26

சந்தேகத்துக்கிடமான முறையில் நிறுத்தப்பட்டிருந்த ஓட்டோவை சோதனையிட்ட பொலிஸார் இரத்தக்கறை படிந்த வாள்கள்களை கைப்பற்றினர். அத்துடன், 6 பேரை கைது செய்துள்ளனர்.

முல்லேரியா - களனி ஆற்று மாவத்தை சந்தியில் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸாரே சந்கேத்தின் அடிப்படையில் நிறுத்தப்பட்டிருந்த ஓட்டோவை சோதனையிட்டனர்.

இதன்போது, ஓட்டோவிலிருந்து மூன்று வாள்கள், ஓர் இரும்புக் கம்பி, கத்தி மற்றும் இரண்டு தோட்டாக்களும் கைப்பற்றப்பட்டன.

சம்பவம் தொடர்பில் முல்லேரியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)







பண்டத்தரிப்பு - வடலியடைப்பு புற்றடி ஆதிசங்கர் ஆலய மகா கும்பாபிஷேகம் நேற்றுமுன்தினம் நடைபெற்றவேளை...!

# கிழக்கில் இராணுவத்தினர் வசமுள்ள 8 ஏக்கர் காணியை மீள கையளிப்போம்!

## *பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் அறிவிப்பு*

**கொழும்பு,ஜன. 26**

**வடக்கு, கிழக்கில் மட்டுமல்ல அனைத்து மாகாணங்களிலும் தற்போதைய மற்றும் எதிர்காலத்தை கருத்திற்கொண்டு இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் தெரிவித்தார்.**

*பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் நேற்று முன் தினம் பாராளுமன்றத்தில் மட்டக்களப்பு குருக்கள்மடம் கலைவாணி மகாவித்தியாலயத்தின் மைதானம் இராணுவத்தினர் வசமிருப்பதாக தெரிவித்து எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் இவ்வாறு கூறினார்.*

*அவர் மேலும் தெரிவிக்கையில்-*

*வடக்கு, கிழக்கில் மாத்திரம் இராணுவ முகாம்கள் இருப்பதாக சாணக்கியன் முன்வைக்கும் கருத்தை நிராகரிக்க வேண்டியுள்ளது.*

*என்னிடமுள்ள தகவல்களுக்கமைய குருக்கள்மடம் பாடசாலை சுனாமி அனர்த்தத்தின் பின்னரே வேறு இடத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.*

*அதன்பின்னர் இராணுவ படைப் பிரிவொன்றின் தலைமையகம் இந்த இடத்திலேயே அமைக்கப்பட்டுள்ளது.*

*இந்நிலையில் முகாமுக்கு வெளியில் குறித்த மைதானம் உள்ளது. அதற்கு அருகில் இரண்டு ஏக்கர் அளவிலான இராணுவ முகமொன்றே உள்ளது.*

*கிழக்கில் இதற்கு முன்னர் 44,980 ஏக்கர் இராணுவத்தினர் வசமிருந்தது. இதில் 90 வீதத்திற்கும் அதிகமான காணிகள் மக்களிடம் மீள்குடியேற்றத்திற்காக கையளிக்கப்பட்டுள்ளது.*

*தற்போது இராணுவத்தினரிடம் 7,379 ஏக்கர் காணிகளே உள்ளன.*

*இவற்றில் 37.8 ஏக்கர் மட்டுமே தனியார் காணிகளாக உள்ளன. 7342 ஏக்கர் அரச காணிகளாகும்.*

*தனியார் காணியில் 8 ஏக்கர் காணியை இந்த வருடத்தில் மீள கையளிப்போம். இதில் இனவாதத்தை இணைக்க வேண்டாம் என்று கோருகின்றேன் என்றார்.*

*கிழக்கில் இராணுவத்தினர் வசமுள்ள 8 ஏக்கர் காணியை இந்த வருடத்தில் மீள கையளிப்போம் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் அறிவிப்பு வடக்கு, கிழக்கில் மட்டுமல்ல அனைத்து மாகாணங்களிலும் தற்போதைய மற்றும் எதிர்காலத்தை கருத்திற்கொண்டு இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன - என்றார். (அ)*



# அம்பாறை செவிப்புலனற்றோர் சங்கத்தால் சைகை மொழி விழிப்புணர்வு செயல்திட்டம்

*கொழும்பு, ஜன. 26*

*அம்பாறை மாவட்ட செவிப்புலனற்றோர் இளைஞர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் காது கேளாத நபர்களின் தேவையைப் பெறுவதற்கு அரச ஊழியர்கள் மற்றும் பொதுமக்களுக்கான விழிப்புணர்வு சார்ந்த சைகை மொழி விளக்கத்தினை காட்சிப்படுத்தும் நடவடிக்கையினை அம்பாறை மாவட்ட செவிப்புலனற்றோர் இளைஞர் சங்கத்தினர் மேற்கொண்டு வருகின்றனர்.*

*சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் நேற்று முன் தினம் இச்செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. பிரதேச செயலாளர் எஸ்.எல் முகம்மது ஹனிபாவிடம் மேற்படி சைகை மொழி விளக்கம் கொண்ட செயலாற்றுகை விநியோகிக்கப்பட்டது.*

*(அ)*



# சங்கமன்கண்டி காட்டுப்பிள்ளையார் புதிய ஆலயம் அமைப்பதற்கு அடிக்கல்

*அம்பாறை, ஜன. 26*

*அம்பாறை மாவட்டத்தில் பழைமையும் வரலாறும் கொண்ட கி.மு. 6 ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட பண்டைய வரலாற்றுத் தொன்மை மிக்க தாண்டியடி, சங்கமன்கண்டி காட்டுப்பிள்ளையார் ஆலய புனர் நிர்மாண அடிக்கல் நாட்டும் நிகழ்வானது பஞ்பூதங்களின் ஆசீர்வாதத்துடன்னும் பக்தர்களின் அரோகரா கோஷங்களுடன் நேற்று முன் தினம் காலை 9.40 முதல் 10.50 வரையான சுப வேளையில் இடம் பெற்றது.*

*இந் நிகழ்வுகள் யாவும் ஆலய நிர்வாக சபை தலைவர் த.முருகானந்தராசா தலைமையில் நடைபெற்றது.*

*இந் நிகழ்வில் ஆலயத்தலைவரினால் பிரதான அடிக்கல் எடுத்துச் செல்லப்பட்டு சாமஸ்ரீ தேசமான்ய சிவாச்சாரியார் திலகம் அகோர சிவாச்சாரியார் சிவப்பிரம்ம ஸ்ரீ சி.கு.கணேஸ் சமூர்த்திஸ்வர குருக்களால் ஆலயம் அமைப்பதற்கான குறித்த வளாகத்தில் நடப்பட்டது.*

*இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு.வே.ஜெகதீசன் மற்றும் திருக்கோவில் பிரதேச செயலாளர் த.கஜேந்திரன் ஆகியோர் பிரதம அதிதியாக கலந்து கொண்டனர். (அ)*

# மாடுகளால் ஏற்பட்ட சர்ச்சை ஆறு பேர் வைத்தியசாலையில்

*திருமலை, ஜன. 26*

*திருகோணமலை , மொரவெவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரொட்டவெவ பகுதியில் இரு குழுக்களுக்கிடையில் புதன்கிழமை இடம்பெற்ற மோதலின் காரணமாக பெண்ணொருவர் உட்பட ஆறு பேர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.*

*மிரிஸ்வெவ பகுதியில் மேற்கொள்ளப்பட்டிருந்த சேனைப் பயிர்ச் செய்கைக்குள் மாடுகள் புகுந்து நாசமாக்கியுள்ளதாக சேனைப்பயிர் செய்கையாளர், மாட்டின் உரிமையாளரிடம் நஷ்டஈடு கோரியபோது ஏற்பட்ட வாக்குவாதத்தில் இரு தரப்பினருக்கும் இடையே கைகலப்பு ஏற்பட்டுள்ளது.*

*இதில் பெண்ணொருவர் உட்பட ஆறுபேர் காயமடைந்த நிலையில் மஹதிவுல்வெவ பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர், அப்பெண் உட்பட வயோதிபர் ஒருவரும் மேலதிக சிகிச்சைகளுக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.*

*சம்பவம் குறித்து மொரவெவ பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)*

# வறிய குடும்பத்துக்கு வீடு கையளிப்பு

*மட்டக்களப்பு, ஜன. 26*

*பரததர்சனா அறப்பணி நிதியத்தினால் மட்டக்களப்பு - மண்முனை மேற்கு பிரதேச செயலகப்பிரிவிற்குட் பட்ட நெடுஞ்சேனை கிராமத்திலுள்ள வசதியற்ற குடும்பமொன்றுக்கு கையளிக்கப்பட்டது.*

*பகீரதன் குடும்பத்தினரின் பூரண அனுசரணையில் அமைக்கப்பட்ட இந்த வீட்டை மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் என்.நமசிவாயம் சத்தியானந்தி பிரதம அதிதியாக கலந்து கொண்டு திறந்து வைத்தார்.*

*இந் நிகழ்வில் பரததர்சனா அறப்பணி நிதியத்தின் தலைவர் ரீ.கேசவநாதன், செயலாளர் வீ.திலீபன், அறப்பணியாளர்கள் மற்றும் பிரதேசவாசிகள் கலந்து கொண்டனர்.*



# கல்முனையில் இன நல்லிணக்க பொங்கல் விழா





*நிந்தவூர்,ஜன.26*

*கல்முனை மாநகரில் இனநல்லிணக்கபொங்கல் விழா நேற்று வியாழக்கிழமை வெகு விமரிசையாக நடைபெற்றது.*

*கல்முனைப் பிராந்திய தமிழ் இளைஞர்சேனை அமைப்பினர் வருடாந்தம் நடத்திவரும் இன நல்லிணக்க பொங்கல் விழாக்கள் வரிசையில் 2024 ஆம் ஆண்டுக்கான பொங்கல் விழாவே நேற்று நடைபெற்றது.*

*கல்முனை பிராந்திய தமிழ் இளைஞர் சேனையின் தலைவர் ஏ.ஏ.டிலாஞ்சன் தலைமையில் கல்முனை பழைய பஸ் நிலைய வளாகத்தில் விழா நடைபெற்றது.*

*இந்தப் பொங்கல் விழாவையொட்டி கல்முனை மாநகரம் முழுவதும் வாழைமரங்கள் மற்றும் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன.*

*விழாவில் கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி.ஜே.அதிசயராஜ் கல்முனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் எம்.எல்.புத்திக, சொரணம் குழுமத் தலைவரும் பிரபல சமூக சேவையாளருமான எம்.விஸ்வநாதன், கல்முனை வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர். என்.ராமேஸ் கல்முனை திரு. இருதயநாதர் ஆலய பங்குத் தந்தை லெஸ்லி ஜெயகாந்தன் அடிகளார் சிவசிறி சச்சிதானந்த குருக்கள், கல்முனை உவெஸ்லி உயர்தரப்பாடசாலை அதிபர் செ.கலையரசன், மாவட்டகலாச்சார உத்தியோகத்தர் கே.ஜெயராஜி மற்றும் இராணுவ, அதிரடிப்படை அதிகாரிகளும் அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.*

*தமிழ் இளைஞர் சேனையின் செயலாளர் எஸ்.திலோஜனின் வரவேற்புரையைத் தொடர்ந்து அதிதிகள் பொங்கல் பானையில் அரிசி இடும் நிகழ்வும் நடைபெற்றது.*

*விழாவில் மகளிர் கிராம அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், விளையாட்டுக்கழகங்களின் உறுப்பினர்கள் ஆலய அறங்காவலர்கள், பொது மக்கள் பெருளவில் கலந்து கொண்டனர்.*

*வருடாந்தம் கல்முனை மாநகரில் இத்தகைய நல்லிணக்க பொங்கல் விழாவை நடத்திவரும் கல்முனை பிராந்திய தமிழ் இளைஞர்சேனையின் செயற்பாட்டையும், அதன் தலைவர், செயலாளர் மற்றும் உறுப்பினர்களையும் விழாவில் உரையாற்றிய அதிதிகள் வெகுவாகப்பாராட்டினர்.*

*(அ-6)*

ஈழநாடு



# 65 உக்ரைன் போர் கைதிகளுடன் பயணித்த ரஷ்ய விமானம் விபத்து!

## அனைவரும் உயிரிழப்பு





மொஸ்கோ, ஜன. 26

74 பேருடன் பயணித்த ரஷ்ய விமானம் விபத்திற்குள்ளாகியுள்ளது.

பெல்கொரோட் எனும் பகுதியில் விமானம் வீழ்ந்து நொறுங்கியதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

விமானத்தில் பயணித்தவர்களில் 65 பேர் உக்ரேனிய படை வீரர்கள் என பாதுகாப்பு அமைச்சை மேற்கோள்காட்டி ரஷ்ய செய்தி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

பெல்கொரோட் ரஷ்ய- உக்ரைன் எல்லைக்கு அருகே உள்ளது.

கடந்த 2022 பெப்ரவரி மாதத்தில் தொடங்கிய ரஷ்ய - உக்ரைன் போரில் இந்நகரம் பல முறை தாக்குதல்களுக்கு உள்ளானது.

ரஷ்யாவின் ஐ.எல்-76 ரக போக்குவரத்து விமானம் ஒன்று, உக்ரைனிலிருந்து ரஷ்யாவால் பிடிக்கப்பட்ட 65 போர் கைதிகளுடன் தென் பெல்கொரோட் பகுதியில் பறந்து கொண்டிருந்த நிலையில் விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் 65 உக்ரைன் வீரர்கள் உயிரிழந்துள்ளனர்.

விமானம், பெல்கொரோட் பிராந்தியத்திற்கு தென்கிழக்கே சுமார் 70 கிலோமீற்றர் தொலைவில் கிராமத்தில் விழும் காணொளி காட்சி சமூக வலைத்தளங்களில் பரவியது.

விபத்திற்குள்ளான விமானத்தில் 6 பணியாளர்களும் மேலும் மூவரும் இருந்துள்ளனர்.

விபத்திற்கான காரணம் இதுவரை தெரியவில்லை. (அ)



# 569 ரோஹிங்கியர்கள் கடலில் மூழ்கி மரணம்

## ஆபத்தான படகு பயணத்தில் எட்டில் ஒருவர் பலியானதாக தகவல்

லண்டன், ஜன. 26

ஆபத்தான படகு பயணம் காரணமாக கடந்த ஆண்டு சுமார் 569 ரோஹிங்கியர்கள் கடலில் மூழ்கி உயிரிழந்தனர் அல்லது காணாமல் போயுள்ளதாக ஐக்கிய நாடுகளின் அகதிகள் முகவர் நிலைய தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 2014 ஆம் ஆண்டுக்கு பின்னர் குறித்த எண்ணிக்கை அதிகரித்தமை இது முதல் சந்தர்ப்பமாகும்.

2023 இல் அந்தமான் கடல் மற்றும் வங்காள விரிகுடாவில் ஏறக்குறைய 4,500 ரோஹிங்கியா மக்கள் படகுகளை எடுத்துக்கொண்டு, பங்களாதேஷில் உள்ள நெரிசலான அகதிகள் முகாம்களில் இருந்து தப்பியோ அல்லது அவர்களது தாயகமான மியான்மரில் இருந்து வெளியேறியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு கடல் பயணம் மேற்கொண்ட எட்டு பேரில் ஒரு ரோஹிங்கிய அகதி உயிரிழந்ததாக அல்லது காணாமல் போனதாக ஐக்கிய நாடுகளின் அகதிகள் முகவர் நிலைய செய்தித் தொடர்பாளர் மத்யூ சால்ட்மார்ஷ் ஒரு அறிக்கையில் சுட்டிக்காட்டினார். (அ)



# முதல் மதுபான சாலையை திறக்கவுள்ள சவூதி அரேபியா

## தூதரக அதிகாரிகளுக்கு மட்டுமே சேவை

ரியாத், ஜன. 26

தலைநகர் ரியாத்தில் தனது முதல் மதுபான சாலையை திறக்க சவுதி அரேபியா தயாராகி வருகிறது.

முஸ்லிம் அல்லாத தூதர்களுக்கு மட்டுமே சேவை வழங்கும் நோக்குடன் மதுபான சாலையை சவுதி அரேபியா திறக்க திட்டமிட்டிருப்பதாக நம்பகத் தகுந்த ஆதாரங்களை மேற்கொள்ளிட்டு ரொய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

சேவையை பெற வாடிக்கையாளர்கள் மொபைல் செயலி மூலம் பதிவு செய்ய வேண்டும் என்பதுடன் வெளியுறவு அமைச்சகத்திடமிருந்து அனுமதிக் குறியீட்டைப் பெறவேண்டும்.

மேலும் அவர்கள் வாங்கும் மாதாந்திர மதுபான ஒதுக்கீட்டு விபரத்தை சமர்ப்பிக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்லாத்தில் மது அருந்துவது தடைசெய்யப்பட்டுள்ளது.

இந் நிலையில் தீவிர பழமைவாத முஸ்லிம் நாட்டை சுற்றுலா மற்றும் வணிகத்திற்காக திறக்க சவுதி இளவரசர் பின் சல்மான் தலைமையிலான அரசின் முயற்சிகளில் இந்த நடவடிக்கை ஒரு மைல்கல் ஆகும்.

எண்ணெய் ஏற்றுமதிக்கு பின்னரான 'விஷன் 2030' எனப்படும் பரந்த பொருளாதார திட்டங்களின் ஒரு பகுதியாகவும் இது உள்ளது.

ஏனைய முஸ்லிம் அல்லாத வெளிநாட்டினர் மதுபான சாலையை அணுக முடியுமா என்பது தெளிவாகத் தெரியவில்லை.

மில்லியன் கணக்கான வெளிநாட்டவர்கள் சவுதி அரேபியாவில் வாழ்கின்றனர், ஆனால் அவர்களில் பெரும்பாலோர் ஆசியா மற்றும் எகிப்தைச் சேர்ந்த முஸ்லிம் தொழிலாளர்கள்.

எதிர்வரும் வாரங்களில் மதுபான சாலை திறக்கப்படும் எனத் திட்டங்களைப் பற்றி நன்கு அறிந்த ஒரு வட்டாரங்கள் ரொய்ட்டர்ஸ் செய்திச் சேவையிடம் உறுதிப்படுத்தியுள்ளன.

சவுதி அரேபியாவில் மது அருந்துவதற்கு எதிராக கடுமையான சட்டங்கள் உள்ளன. இது நூற்றுக்கணக்கான சவுக்கடி, நாடு கடத்தல், அபராதம் அல்லது சிறைத்தண்டனை போன்றவற்றுக்கு வழி வகுக்கின்றது.

# கொரோனா தொற்றை விட 20 மடங்கு ஆபத்தான வைரஸ்!

## உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை



பேர்ண், ஜன. 26

எதிர்காலத்தில் கொரோனா வைரஸை விட இருபது மடங்கு ஆபத்தான வைரஸை உலக நாடுகள் எதிர்கொள்ள நேரிடும் என உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

Disease X என அடையாளப்படுத்தப்படும் இந்த தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கு அனைத்து நாடுகளும் இணைந்து தொற்றுநோய் ஒப்பந்தத்தில் கையெழுத்திடவேண்டுமென உலக சுகாதார ஸ்தாபனத்தின் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

சுவிஸர்லாந்தில் நடைபெற்ற உலக பொருளாதார மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துரைக்கும் போதே உலக சுகாதார ஸ்தாபனத்தின் பணிப்பாளர் நாயகம் இந்த எச்சரிக்கையினை விடுத்துள்ளார்.

தொற்றுநோய் இதுவரை அடையாளம் காணப்படாததன் காரணமாக Disease X எனும் பெயரில் அடையாளப்பப்படுத் தப்படுகிறது. இந்த தோற்று நோய் கொரோனா வைரஸ் தொற்றை ஒத்த அல்லது அதைவிட ஆபத்தான தோற்று நோயாக இருக்கக்கூடுமென குறிப்பிடப்படுகிறது.

மேலும் இது ஒரு வைரஸ், பாக்டீரியா அல்லது பூஞ்சை இனமாக இருக்கலாம் என உலக சுகாதார ஸ்தாபனம் ஊகிக் கின்றது. இதன்படி, கொவிட் 19, எபோலா, நிபா போன்ற ஆயிரக்கணக்கான உயிரிழப்புகளை ஏற் படுத்திய தொற்றுநோய்கள் பட்டியலில் Disease X தொற்றுநோயும் சேர்க்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தோற்று பாதிப்பு ஏற்படுத்திய தாக்கத்தில் இருந்து உலக நாடுகள் இன்னும் மீளாத நிலையில், உலக சுகாதார ஸ்தாபனத்தின் புதிய எச்சரிக்கை மேலும் அச்சத்தை ஏற்படுத்துகிறது. ஆகவே, உலக நாடுகள் தொற்று நோயை எதிர்கொள்வதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து தற்போதே கவனம் செலுத்துவது அவசியம். (அ)

# பிரான்ஸ் போராட்டத்தில் கார் மோதி பெண் விவசாயி மற்றும் மகள் மரணம்!



பாரிஸ், ஜன. 26

பிரான்ஸ் விவசாயிகள் நாடு முழுவதும் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் நிலையில், போராட்டக்காரர்கள் மீது கார் மோதியதில் 30 வயது மதிக்கப்பத்தக்க பெண்ணொருவரும் அவரது 12 வயது மகளும் உயிரிழந்துள்ளனர்.

குறித்த பெண் விவசாயியின் கணவர் கடுமையான காயங்களுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கபப்ட்டுளளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

பிரான்ஸின் தென்மேற்கு பகுதியில் பல நாட்களாக விவசாயிகள் வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுக்கப்பட்டு வருகின்றன.

புதிய சுற்றுச்சூழல் விதிமுறைகள் மற்றும் அதிகரித்து வரும் எரிசக்தி செலவுகளுக்கு எதிராக இவ்வாறு போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையிலே, விவசாயிகளின் போராட்டத்தின் மீது கார் மோதி இந்த விபத்து நேர்ந்துள்ளது. இருப்பினும், குறித்த விபத்து திட்டமிட்டு நேரவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே, விபத்தை ஏற்படுத்திய காரில் பயணித்த மூவரும் கைது செய்யப்பட்டுள்ளதுடன், விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. (அ)

# பெரமுன கிராமங்களுக்கு செல்வதை தடுக்கமுடியாது

## கொள்கை இல்லாத கட்சிகள் சத்தமிடுகின்றன என்கிறார் நாமல்

கொழும்பு, ஜன. 26

எப்படியான சவால்கள் வந்தாலும் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டாலும் கட்சியினருடன் பொதுஜன பெரமுன கட்சியினருடன் கிராமங்களில் இயங்கும் எனவும் தமது கட்சி கிராமங்களுக்கு செல்வதை தடுக்கும் நோக்கிலேயே அரசியல் கட்சிகள் 'ஊ' சத்தமிடுவதாகவும் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொதுஜன பெரமுன கட்டாயம் கிராமங்களுக்கு செல்லும் கொள்கை இல்லாத சில அரசியல் கட்சிகளுக்கு 'ஊ' சத்தமிடுவதை தவிர வேறு மாற்று எதுவுமில்லை

நாங்கள் விளையாடியவர்கள் என்ற வகையில் றக்பி என்றால் ரெப்ரியை திட்டுவோம், கிரிக்கெட் என்றால் அம்பயாரை திட்டுவோம்.

தோல்வியடையும் அல்லது வெற்றி பெறும் அணியை பார்த்து பார்வையாளர்கள் 'ஊ' சத்தமிடுவதை பார்த்திருக்கின்றோம்.

சில அரசியல் கட்சிகள் வங்குரோத்து அடையும் போது, கொள்கை இல்லாத போது இந்த வழிமுறையை பின்பற்றுகின்றன.

பொதுஜன பெரமுன கிராமங்களுக்கு செல்வதை தடுக்க வழிமுறைகளை பயன்படுத்துகின்றனர்.

கிராமத்திற்கு செல்லவில்லை என்றால், பொதுஜன பெரமுன கிராமத்திற்கு வருவதில்லை என்றும் கூறுகின்றனர்.

1988 ஆம் ஆண்டில் இருந்து வீடுகளை தீயிட்ட கட்சி பாராளுமன்றத்தில் இருக்கின்றது.

அவர்களில் தலைமைத்துவம் தொடர்பான சவால்கள் இருக்கும் நபர்கள், ஜனாதிபதி வேட்பாளர் ஒருவரை பெயரிட்டு கொண்டு துள்ளி குதிக்கின்றனர் - என்றார். (அ)

# ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் நிகழ்நிலை காப்புச் சட்டம் ரத்து!

## அஜித் பெரேரா கூறுகிறார்

கொழும்பு, ஜன. 26

நிகழ்நிலைக் காப்புச் சட்டமூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில், ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியின் போது அச்சட்டம் இரத்து செய்யப்படும் என்று - அக்கட்சியின் பிரதம நிறைவேற்று அதிகாரியும் சட்டத்தரணியுமான அஜித் பி பெரேரா தெரிவித்தார்.

" ஊழல்களை அம்பலப்படுத்தும், குற்றங்களை வெளிப்படுத்தும் நபர்களை இலக்கு வைத்தும், அவர்களின் அரசியல் செயற்பாடுகளை மட்டுப்படுத்தும் நோக்கிலுமே நிகழ்நிலைக் காப்பு சட்டமூலம் அவசர அவசரமாக கொண்டுவரப்பட்டுள்ளது.

இது ஏற்புடைய சட்டமூலம் அல்ல என நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர், தனது இருப்பைக்காப்பதற்கான அரசின் நகர்வாகவே இது அமைந்துள்ளது. கடும் எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் இச்சட்டமூலம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் பட்சத்தில், எதிர் வரும் ஒக்ரோபர் மாதத்துக்கு பின்னர் ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியின்கீழ் முதல் வேலையாக அச்சட்டம் மீளப்பெறப்படும்." - எனவும் அஜித் பி பெரேரா குறிப்பிட்டார்.

அதேவேளை, நிகழ்நிலைக் காப்புச்சட்டமூலத்துக்கு பதிலாக ஜனநாயக அடிப்படையிலான சட்டம் தமது ஆட்சியில் கொண்டுவரப்படும் என ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது. (அ)

# தமிழ்க் கைதியை தாக்கிய முதலை!



கொழும்பு, ஜன. 26

அநுராதபுரம் சிறைச்சாலையில் தமிழ்க் கைதி ஒருவர் முதலையின் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார்.

குறித்த கைதி முதலையால் இழுத்துச் செல்லப்பட்டபோதும் பெரும் முயற்சியை அடுத்து காப்பாற்றப்பட்டுள்ளார்.

அனுராதபுரம் சிறைச்சாலையிலுள்ள திறந்தவெளி சிறைச்சாலை முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 43 வயதுடைய தமிழ் கைதி ஒருவர் முதலையால் தாக்கப்பட்டுள்ளார்.

சிறைச்சாலைப் பகுதியில் உள்ள மல்வத்து ஓயாவை அண்மித்த பகுதியில் குறித்த கைதியும் இன்னும் சில கைதிகளும், பயிர்ச் செய்கைகளில் ஈடுபட்டிருந்த போது மூங்கில் புதருக்குள் மறைந்திருந்த முதலை ஒன்று கைதியின் காலைப் பிடித்து மல்வத்து ஓயாவுக்கு இழுத்துச் சென்றதாக சிறைச்சாலை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

முதலையின் தாக்குதலுக்கு உள்ளாகி, ஒரு கை, கால் மற்றும் கழுத்து பகுதியில் காயமடைந்து கைதி அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் அவருக்கு சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

மல்வத்து ஓயாவில் நீராடச் சென்ற கைதியை முதலை தாக்கியதாக கிடைத்த தகவலை மறுத்த சிறைச்சாலையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர், பயிர்ச்செய்கையில் ஈடுபட்டிருந்தபோதே இந்த முதலைத் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

# மூன்று வருடங்களுக்குள் நான்கு தடவைகள் பாராளுமன்ற கூட்டத்தொடர் இடைநிறுத்தம்!

## மோசமான செயல் என்கிறார் கம்மன்பில

கொழும்பு, ஜன. 26

பாராளுமன்ற அமர்வை இடைநிறுத்துவது நேரத்தையும், மக்கள் பணத்தையும் வீணடிக்கும் செயலாகும். பாராளுமன்ற அமர்வு இடைநிறுத்தப்படுவதன் நோக்கத்தை ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும் என்று பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது இது தொடர்பில் அவர் கூறியவை வருமாறு,

அரசமைப்பின் பிரகாரம் நாடாளுமன்ற அமர்வை இடைநிறுத்தி, புதிய கூட்டத்தொடருக்கான திகதியை நிர்ணயிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உள்ளது. எனினும், தான் நினைக்கும் நேரங்களில் எல்லாம் பாராளுமன்ற அமர்வை இடைநிறுத்துவது ஏற்புடைய நடவடிக்கை அல்ல, இதற்கு முன்னர் அவ்வாறு நடந்தது கிடையாது.

தற்போதைய பாராளுமன்றத்தின் ஐந்தாவது கூட்டத் தொடரே பெப்ரவரி மாதம் ஆரம்பமாக உள்ளது. மூன்று ஆண்டுகளுக்குள் 5 கூட்டத் தொடர்கள், இதற்கு முன்னர் 1977 ஆம் ஆண்டு முதல் 1988 ஆம் ஆண்டுவரை இருந்த நாடாளுமன்றத்திலேயே 5 தடவைகளுக்கு மேல் பாராளுமன்ற அமர்வு இடைநிறுத்தப்பட்டுள்ளது. அதுவும் 10 வருடங்கள்.

எனவே, இவ்வாறு பாராளுமன்ற அமர்வை இடைநிறுத்துவது நேரத்தையும், பணத்தையும் நாசமாக்கும் செயல். பாராளுமன்ற அமர்வு இடைநிறுத்தப்பட்டதும் பாராளுமன்ற குழுக்களும் கலைந்துவிடும், அமைச்சுசார் ஆலோசனைக்குழுக்களும் கலைந்து விடும். சம்பிரதாய பூர்வமாக ஜனாதிபதியால் பாராளுமன்ற அமர்வு ஆரம்பிக்கப்பட்டு, விருந்துபசாரமும் நடத்தப்படும். எனவே, எதற்காக பாராளுமன்ற அமர்வு இடைநிறுத்தப்படுகின்றது, இடைநிறுத்தப்படுவதற்கான உண்மையான நோக்கம் என்னவென்பதை ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும்." - என்றார். (அ)

# 20 அத்தியாவசியப் பொருட்கள் குறித்து அடுத்த வாரம் அமைச்சரவைக்கு பத்திரம்

## அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 26

பால்மா, உருளைக்கிழங்கு, வெங்காயம் உள்ளிட்ட 20 அத்தியாவசியப் பொருட்களின் தேவை அல்லது குறைபாடு தொடர்பில் எதிர்வரும் வாரம் விசேட அமைச்சரவைப் பத்திரமொன்றை சமர்ப்பிக்கவுள்ளதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டிற்கு பால்மா இறக்குமதி செய்யும் போது சுகாதார அமைச்சு மற்றும் தர நிர்ணய சபை ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் மாதிரி பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன.

பால் மாவின் தரம் தொடர்பில் இதுவரை அளவீடு ஒன்று நடைமுறையில் இல்லாமல் இருந்தது. நான் வர்த்தக அமைச்சராக சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு அதனை சமர்ப்பித்து இறக்குமதி செய்யும் பால் மாவில் கலக்கப்பட்டுள்ள பொருட்கள் தொடர்பில் ஆராய்வதற்காக நடவடிக்கை எடுத்தேன்.

அந்த நிறுவனம் அது தொடர்பில் ஆராய்ந்து அடுத்த மாதமளவில் எனக்கு அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளது. அதன் மூலம் இனி இறக்குமதி செய்யப்படும் பால்மாவின் தரம் தொடர்பில் நாம் உறுதிப்பாடு வழங்க முடியும் .

பால்மா மட்டுமல்ல நாட்டில் 20 அத்தியாவசியப் பொருட்கள் தொடர்பில் நான் அடுத்த வாரம் அமைச்சரவைக்கு பத்திரமொன்றை சமர்ப்பிக்கவுள்ளேன். அந்த வகையில் பால் மா, உருளைக்கிழங்கு, பெரிய வெங்காயம் போன்ற நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் எமது நாட்டின் உற்பத்தி மேலதிகமாக காணப்படுகின்றதா? அல்லது நாட்டின் தேவைக்கு குறைவாக காணப்படுகின்றதா என்பது தொடர்பிலும் அது தொடர்பில் எதிர்காலத்தில் மேற்கொள்ள கூடிய நடவடிக்கைகள் என்ன என்பது தொடர்பிலும் எம்மிடம் உள்ள பரிந்துரைகளை அடிப்படையாகக் கொண்டு நாம் அறிக்கை ஒன்றை வெளியிடவுள்ளோம்.

விவசாய அமைச்சின் தரவுகளுக்கு அமைவாக நாம் அதனை தயாரித்துள்ளோம். அதனோடு இணைந்த ஏனைய நிறுவனங்களுடனும் அது தொடர்பில் நாம் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளோம்.

குறிப்பாக நாம் பால்மாவுக்கான வரி அதிகரிப்பை மேற்கொண்டதன் மூலம் உள்ளூர் பால் உற்பத்தியாளர்களை ஊக்குவித்துள்ளோம். அத்துடன் தேசிய பால் உற்பத்தியாளர்களை பாதுகாக்கவும் நடவடிக்கை எடுத்துள்ளோம். பால்மா இறக்குமதியை குறைக்கும் வகையிலேயே அவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொண்டோம் - என்றார். (அ)

# பிரதமர் ஆட்சிமுறைமைக்கு பொன்சேகா போர்க்கொடி!

கொழும்பு, ஜன. 26

"தற்போதைய பாராளுமன்றத்தில் ஊழல்வாதிகளும் உள்ளனர். எனவே, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையைநீக்கிவிட்டு, பிரதமர் ஆட்சிமுறைமையை கொண்டு வருவதற்கான நேரம் இதுவல்ல." - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சரத்பொன்சேகா தெரிவித்தார்.

நிறைவேற்று ஜனாதிபதி ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படும் என்று முன்னாள் சபாநாயகர் கருஜயசூரிய தெரிவித்துள்ள விடயம் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் பொன்சேகா மேலும் கூறியவை வருமாறு:-

ஜனாதிபதி முறைமையை நீக்குவது இலகுவான காரியம் அல்ல, சர்வஜன வாக்கெடுப்பையும் நடத்த நேரிடும். தற்போதைய சூழ்நிலையில் மக்களின் பிரச்னைகளை தீர்ப்பதற்கே முன்னுரிமை வழங்கப்படவேண்டும். எனவே, இருக்கின்ற பொறிமுறையை பலப்படுத்துவதைவிட, அதனை பலவீனப்படுத்தும் வகையில் செயற்படக்கூடாது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்கிவிட்டு, பிரதமர் ஆட்சிமுறைமையை கொண்டுவர வேண்டுமெனில் பாராளுமன்றம் பலம்மிக்கதாக இருக்க வேண்டும். நாட்டை ஆளக்கூடிய நல்லவர்கள் 225 பேர் இருக்கின்ற பாராளுமன்றத்தின் கீழ் அதனை செய்யலாம். தற்போதைய பாராளுமன்றத்தில் ஊழல் வாதிகள் உள்ளனர், இது பற்றி மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும். ஊழல் வாதிகளை எமது கட்சிக்கு எடுப்பதற்கு அனுமதி வழங்கப்போவதில்லை.

அதேவேளை, மொட்டு, யானை கூட்டணி எதிரணி தரப்புக்கு சவாலாக அமையாது- என்றார். (அ)

## இணையவழி காப்பு சட்ட மூலத்தின்...

நிகழ் நிலை காப்பு சட்டமூலம் தொடர்பில் எக்ஸ் தளைக்ஸல் அவர் இவ்வாறு பதிவிட்டுள்ளார்.

இந்த சட்டத்திருத்தம் மூலம் கருத்து சுதந்திரம், புத்தாக்கம் மற்றும் தனியுரிமைக்கு அச்சுறுத்தல் ஏற்படுவதாகவும் சிவில் சமூகமும் தொழில்நுட்ப நிறுவனங்களும் அடங்கலாக பிரதான தரப்பினர் முன்வைத்த முக்கிய விடயங்கள் உள்வாங்கப்படவில்லையெனவும் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அமெரிக்கா கவலையடைவதாகவும் இவ்வாறான செயற்பாடுகள் மூலம் ஜனநாயகத்தின் பெறுமதி ஆபத்தில் வீழ்ந்துவிடும் அபாயம் இருப்பதாகவும் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் தெரிவித்துள்ளார்.

வெளிப்படைத்தன்மைக்கு முன்னுரிமை வழங்குமாறும், சட்டங்களை வகுக்கும் போது மக்களின் குரலை முடக்காமல் இருப்பதை உறுதிப்படுத்துமாறும் அமெரிக்கா இலங்கையிடம் கோரிக்கை விடுப்பதாகவும் அவர் தனது எக்ஸ் பதிவில் குறிப்பிட்டுள்ளார். (அ)

## இராஜாங்க...

இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த, அவரின் மெய்ப்பாதுகாவலரான கான்ஸ்டபிள் ஜெயக்கொடி, வாகன சாரதி ஆகியோர் படுகாயமடைந்து ராகம போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவும் பொலிஸ் கான்ஸ்டபிளும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்தனர்.

சாரதி அதிதீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார். கந்தானை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## இளையராஜா...

அங்கு உயிரிழந் தார்.

பவதாரணி 2000ஆம் ஆண்டு வெளியான 'பாரதி' படத்தில் 'மயில் போல பொண்ணு ஒண்ணு'என்ற பாடலுக்கு இந்திய தேசிய விருதைப் பெற்றிருந்தார். இவர், 1984இல் வெளியான 'மை டியர் குட்டிச் சாத்தான்' மலையாள படத்தில் இடம்பெற்ற 'திதிதே தாளம்' பாடலின் மூலம் பின்னணி பாடகராக அறிமுகமானார். தொடர்ந்து, 'ராசய்யா', 'அலெக்சாண்டர்', 'தேடினேன் வந்தது', 'காதலுக்கு மரியாதை', 'அழகி', 'பிரண்ட்ஸ்', 'தாமிரபரணி', 'உளியின் ஓசை', 'கோவா', 'மங்காத்தா', 'அனேகன்' உள்ளிட்ட பல்வேறு படங்களில் பாடியுள்ளார்.

பவதாரணி கடந்த 5 மாதங்களாக புற்றுநோய்க்கு சிகிச்சை பெற்று வருகிறார் என்று கூறப்படுகிறது. ஆயுள்வேத சிகிச்சைக்காக அவர் இலங்கை வந்திருந்த நிலையிலேயே மாரடைப்பால் உயிரிழந்தார்.

இதேவேளை, இசைஞானி இளையராஜா கொழும்பில் நடைபெறும் இசை நிகழ்ச்சியில் பங்கேற்க நேற்று முன்தினம் வருகை தந்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ- 03)

## சஜித்தின்...

அவர் உட்பட சிலருக்கு ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியை சீர்குலைக்கும் தேவைப்பாடு உள்ளது, அதனால்தான் குழப்பத்தை ஏற்படுத்தும் விதத்தில் இப்படியான கருத்துகள் பரப்பட்டு வருகின்றன.

நான் நிதி அமைச்சை கேட்கவும் இல்லை, அது வழங்கப்படும் என உறுதியளிக்கப்படவும் இல்லை. ஐக்கிய மக்கள் சக்தியின் பொருளாதாரக் குழுவில் உள்ள ஒருவருக்குதான் நிதி அமைச்சு பதவி வழங்கப்பட வேண்டும்-என்றார்.

## வடக்கு...

விவசாயிகள் இந்த நாட்களில் நெல் அறுவடை, அவற்றை காயவிடுதல் போன்ற பணிகளை தவிர்க்குமாறும் அவர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

இதனிடையே, இன்று வெள்ளிக்கிழமை வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் மிகச்சிறியளவிலான மழை கிடைக்க வாய்ப்புள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## பாராளுமன்றம்...

அதன் காரணமாக புதிய அமர்வின் பின்னர் அவற்றுக்கான தலைவர் மற்றும் அங்கத்தவர்கள் புதிதாக நியமிக்கப்படவுள்ளனர். (அ)

## தமிழினத்தை...

தமிழினத்தை பொறுப்புடன் வழி நடத்த வேண்டி கட்டாயம் ஏற்பட்டுள்ளது. நாங்கள் ஒன்றாக இருந்தால் மட்டுமே எங்கள் உரிமையை வெற்றி கொள்ள முடியும். தமிழ் தேசியத்தின் விடுதலைப் பயணம் இன்று எங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் புதிய தலைவராக சி.சிறீதரன் தெரிவு செய்யப்பட்டுள்ளதை அடுத்து இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் ஸ்தாபகர் தந்தை செல்வாவின் நினைவுத்தூபிக்கு மன்னாரில் நேற்று மரியாதை செலுத்தினார்.

இதனையடுத்து தமிழரசு கட்சியின் கிளை காரியாலயத்தில் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றிய அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தமிழ் தேசிய இனத்திற்கான தனித்துவமான அடையாளங்கள் இருக்கின்றன. இதன் காரணமாகவே இந்த மண்ணில் இவ்வளவு நெருக்கடிகளை சந்தித்தும் கூட நாங்கள் மனிதர்களாக வாழ்கின்றோம். நாங்கள் தர்மத்தின் வழியில் போராடியவர்கள்.

நாங்கள் எப்போதும் தர்மத்தையும், அறத்தையும் நிலைநாட்டியவர்கள், தேசிய தலைவருக்கு பின்னால் அணி திரண்டு, அந்த தலைவரின் பண்பாடுடன் வளர்க்கப்பட்ட வாரிசுகள். அதனால் தான் விழ விழ மீண்டும் மீண்டும் எழுந்து நிற்கின்றோம்.

இனியும் தமிழ் மக்களை இந்த அரசாங்கம் ஏமாற்றுமாக இருந்தால் அது அந்த அரசாங்கத்தின் மூடுபாதையாகவே இருக்கும். தமிழர்கள் தற்போது வெளிச்ச பாதையில் காலடி எடுத்துவைத்துள்ளார்கள்.

இந்நிலையில், தமிழ் மக்களுக்கு உன்னதமான அரசியல் தீர்வை இந்த அரசாங்கம் வழங்க வேண்டும். அவ்வாறு வழங்கினால் அது இலங்கையின் பொருளாதாரம் மற்றும் அந்தஸ்து இந்த உலகத்தில் உயரும் என்பதில் ஐயம் இல்லை.

இலங்கை தனது பொருளாதாரத்தை மெல்ல இழக்கின்றது. சிங்கள மக்கள் தனது நாளாந்த வருமானத்தை இழந்து வருகின்றனர். அவர்கள் வரி செலுத்திகளைத்துவிட்டனர். அவர்களின் சுதந்திர உணர்வுகள் பறிக்கப்படுகின்றன.

அவர்களின் வாழும் உரிமை தங்கள் இனத் தலைவர்களாலேயே பறிக்கப்படுகின்றன என்பதை சிங்கள மக்கள் இன்று உணரத் தொடங்கிவிட்டனர். இந்த அரசாங்கம் தன்னுடைய இனத்தையே காவுகொள்ள பார்க்கின்றது.

தமிழினத்தை பொறுப்புடன் வழி நடத்த வேண்டி கட்டாயம் ஏற்பட்டுள்ளது. நாங்கள் ஒன்றாக இருந்தால் மட்டுமே எங்கள் உரிமையை வெற்றி கொள்ள முடியும். தமிழ் தேசியத்தின் விடுதலைப் பயணம் இன்று எங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், அனைவரின் ஒத்துழைப்புடனும் ஈழ தேசிய விடுதலையின் எல்லையை தொடமுடியும்-என்றார். (அ)

# தமிழரசின் பொதுச் செயலர் பதவிக்கு குலநாயகம் போட்டி!

யாழ்ப்பாணம், ஜன. 26

இலங்கை தமிழரசு கட்சியின் பொதுச் செயலாளர் பதவிக்கு சேவியர் குலநாயகம் போட்டியிடவுள்ளார் என்று அந்தக் கட்சியின் உயர்வட்டாரங்கள் தகவல் தெரிவித்தன.

இலங்கை தமிழரசு கட்சியின் செயலாளர் பதவிக்கும் தேர்தல் மூலமே ஒருவர் தெரிவு செய்யப்பட வாய்ப்புள்ளது. இந்த நிலையில், தமிழரசு கட்சியின் சேவியர் குலநாயகமும் போட்டியிடவுள்ளார்.

தற்போது கட்சியின் தலைவராக சி. சிறீதரன் இருக்கிறார். இவர் வடக்கு மாகாணத்தை சேர்ந்தவர். எனவே, கட்சியின் மரபுப்படி, பொதுச் செயலர் பதவிக்கு கிழக்கு மாகாணத்தில் இருந்தே தெரிவு செய்யப்பட வேண்டும். ஆனால், பொதுச் செயலர் பதவியை பலர் கோருவதால் அதற்கும் தேர்தல் நடத்தப்பட வாய்ப்புள்ளதாகக் கருதப்படுகிறது.

இந்த நிலையில், தமிழரசு கட்சியின் சேவியர் குலநாயகமும் பொதுச் செயலர் பதவியை கோருகிறார். எனவே, அவரும் பொதுச் செயலருக்கான தேர்தலில் களமிறங்க ஆயத்தமாகி வருகிறார் என்றும் தெரிய வந்தது. (ஐ)

## நாடு முழுவதும்...

ரணில் விக்ரமசிங்க இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சி அடைந்திருந்ததால் நான் நாட்டைப் பொறுப்பேற்றேன். மக்கள் வாழ்வாதரத்திற்கு வழி இருக்கவில்லை. எரிபொருள் மற்றும் எரிவாயு இருக்கவில்லை. அந்த நிலை தொடர்ந்தால் இந்த நாட்டின் இருப்பு கேள்விக்குறியாகிவிடும். எனவே, இந்த நாட்டைக் காப்பாற்றி பொருளாதாரத்தை கட்டியெழுப்ப வேண்டும் என்பதற்காகவும், அதனை செய்ய முடியும் என்ற நம்பிக்கை இருந்ததாலும் ஜனாதிபதி பொறுப்பை ஏற்றுக்கொண்டேன்.

இப்போது இரண்டு ஆண்டுகள் கடந்துவிட்டன. இன்று படிப்படியாக நாடு இயல்பு நிலைக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறது. இன்று தட்டுப்பாடுகள் இல்லை. ஆனால் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதில் ஏற்படும் பிரச்சினைகளை நாம் எதிர்கொள்ள வேண்டியிருக்கின்றது. தற்போது அந்த நிலையில் இருந்து படிப்படியாக முன்னேறி வருகிறோம்.

வங்குரோத்து நிலையில் இருந்த இலங்கையின் பொருளாதாரம் தற்போது மீண்டு வந்துள்ளதாக சுவிட்சர்லாந்து விஜயத்தின் போது உலகத் தலைவர்களிடம் தெரிவித்தேன். அவர்களில் பலர் இவ்வளவு குறுகிய காலத்தில் நாம் அடைந்திருக்கும் முன்னேற்றம் ஆச்சரியம் அளிப்பதாக தெரிவித்தனர்.

உலக வங்கியின் தலைவர் மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளருடன் கலந்துரையாடும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. நாங்கள் பொருளாதார ஸ்திரத்தன்மையை அடைந்துள்ளோம், ஆனால் எங்களின் வருமானம் போதுமானதாக இல்லை.

எனவே, நாட்டின் வருமானத்தை அதிகரிக்க வேண்டியுள்ளது. அதனால் தான், துரதிர்ஷ்டவசமாக, வற் வசூலிக்க வேண்டியேற்பட்டது. இப்போது நாம் எதிர்மறை பொருளாதாரத்திற்கு பதிலாக நேர்மறை பொருளாதாரத்தை நோக்கி நகர்கிறோம்.

புதிய தொழில்துறைகள் மற்றும் புதிய முதலீட்டு வாய்ப்புகளை உருவாக்கி மக்களுக்கு தொழில் வாய்ப்பை வழங்க வேண்டும். அதற்கான தகுந்த சூழலை உருவாக்கும் முயற்சியில் தற்போது ஈடுபட்டுள்ளோம். நாடு முழுவதும் பியகம முதலீட்டு வலயம் போன்ற முதலீட்டு வலயங்களை உருவாக்கி நாட்டின் பொருளாதார வேகத்தை பத்து மடங்கு அதிகரிக்க திட்டமிட்டுள்ளோம்.

இங்கே நாம் பியகமவை உதாரணமாக எடுத்துக்கொள்வோம். அன்று நான் பியகமவுக்கு வந்தபோது இங்கு எதுவுமில்லை என முன்பே கூறினேன். ஆனால் திறந்த பொருளாதாரத்தில் இந்தப் பகுதியை மேம்படுத்த முடியும் என்று நான் நம்பினேன். ஜே.ஆர் ஜயவர்தன கட்டுநாயக்கவில் முதலாவது முதலீட்டு வலயத்தை ஆரம்பித்து வைத்தார். அப்போதும் கட்டுநாயக்க ஒரு அபிவிருத்தியடைந்த பிரதேசமாக இருந்தது.

நான் இரண்டாவது முதலீட்டு வலயத்தை பியகமவிற்கு வழங்குமாறு ஜே.ஆர். ஜயவர்தன ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தேன். பியகம போதியளவு வளர்ச்சியடையவில்லை எனவே அதனை வேறு பகுதிக்குக் வழங்குவோம் என்றார்கள் சிலர். எம்முடன் இருப்பவர்களே இதை ஏன் கேட்கிறீர்கள், இதனால் பலன் இல்லை என்றார்கள். ஆனால் நாங்கள் பியகம முதலீட்டு வலயத்தை ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்தோம்.

எனவே பியகம திறந்த பொருளாதாரத்தை முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டது. அதனுடன் களனியும் இணைந்துகொண்டது. குறுகிய காலத்தில் தலுகம, கிரிபத்கொட, மாகொல, மாவரமண்டிய, கடவத்தை ஆகியன பெரும் பொருளாதாரத்தை கொண்ட பகுதிகளாக மாறின.

மேலும், இந்த அபிவிருத்தியை நாட்டின் ஏனைய பிரதேசங்களிலும் செய்ய திட்டமிட்டுள்ளோம். பிங்கிரிய, கண்டி, அம்பாந்தோட்டை, திருகோண மலை, வடக்கு உள்ளிட்ட பகுதிகளை முதற்கட்டமாக அடையாளம் கண்டிருக்கிறோம். எனவே, திறந்த பொருளாதாரத்தைப் பயன்படுத்தி, தேசிய பொருளாதாரத்தை பத்து மடங்கு உயர்த்த திட்டமிட்டுள்ளோம் - என்றார். (அ)

## சனத்...

அதிகூடிய விருப்பு வாக்குகளை பெற்றவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாகினர். இதில், இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த 80 ஆயிரத்து 82 வாக்குகளை பெற்றிருந்தார்.

சனத் நிஷாந்தவின் மரணத்தை அடுத்து பெரமுன கட்சியின் சார்பில் ஆறாவது அதிகூடிய வாக்குகளைப் பெற்றிருந்த ஜெகத் பிரியங்கர பாராளுமன்ற உறுப்பினராகவுள்ளார். இவர் 45 ஆயிரத்து 272 வாக்குகளை பெற்றிருந்தார்.

இதேவேளை, பிரியங்கர ஆளும் கட்சியின் சார்பில் பாராளுமன்ற உறுப்பினரானாலும் அவர் எதிரணியில் அமர்வார் என்று கருதப்படுகின்றது. ஏனெனில், பொதுஜன பெரமுனவின் சார்பில் அவர் போட்டியிட்டிருந்தாலும் தற்போது சுயாதீனமாக இயங்கி வரும் விமல் வீரவன்ஸவின் தேசிய சுதந்திர முன்னணியின் கட்சியின் சார்பிலேயே வேட்பாளராக நியமிக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இணையவழி...

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஈ-கொமர்ஸில் யோசனை ஏற்படுத்தும் விளைவுகளை ஒருவர் கவனிக்க வேண்டும்.

அத்துடன் நமது இளைஞர்களை இ-கொமர்ஸ் மூலம் பொருளாதாரத்தில் பங்கு கொள்ளச் செய்ய வேண்டும்.

எனினும் இணையவழி பாதுகாப்பு சட்டங்கள் அதற்கான வாய்ப்புகளை தடுக்கும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

மற்றொருவர் சமூக ஊடகங்களில் தேவையற்ற இடுகையைப் பதிவேற்றுவதால்,

பேஸ்புக் மற்றும் யூ டியூப் போன்ற சேவை வழங்குநர்களை குற்றவாளிகளாக அரசாங்கம் கருத முடியாது - என்றார்.

ஈழநாடு
Eelanadu

# நிகழ்நிலை பாதுகாப்பு சட்டம்; அரசாங்கத்தின் புதிய ஆயுதம்!

## சர்வதேச மன்னிப்பு சபை

புதுடில்லி, ஜன. 26

**நிகழ்நிலை காப்பு சட்டமூலம் நிறைவேற்றப்பட்டமை இலங்கையின் மனித உரிமைகள் மீதான பெரும் தாக்குதல் என சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.**

அத்துடன், இந்தச் சட்டம் கருத்து சுதந்திரத்தை ஒடுக்குவதற்கும் - கருத்து வேறுபாடுகளை அடக்குவதற்கும் அரசாங்கத்தால் பயன்படுத்தக்கூடிய புதிய ஆயுதம் என்றும் அந்த அமைப்பு கூறியுள்ளது.

நிகழ்நிலை காப்பு சட்டத்தை உடனடியாக மீளப்பெற்று, நாட்டிலுள்ள அனைவரினதும் மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்கப்படுவதை உறுதிப்படுத்துமாறும் சர்வதேச மன்னிப்பு சபை வலியுறுத்தியுள்ளது.

இந்த சட்டத்தின் பெரும்பாலான பகுதிகள் சர்வதேச மனித உரிமை நியமங்களுக்கு உட்பட்டவையல்ல என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கையில் இலங்கை கைச் சாத்திட்டுள்ளதாக சர்வதேச மன்னிப்பு சபை சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த நிலையில், தேர்தலுக்கு முன்னரும் தேர்தலின் போதும் அதன் பின்னரும் மனித உரிமைகளுக்கு உத்தரவாதம் அளிப்பதனூடாக, தமது சர்வதேச மனித உரிமை கடமைகள் மற்றும் கடப்பாடுகளை நிலைநாட்டுவதற்கான அரசியல் விருப்பத்தை இலங்கை அதிகாரிகள் வெளிப்படுத்த வேண்டுமெனவும் சர்வதேச மன்னிப்பு சபை வலியுறுத்தியுள்ளது. (ஐ)

# சனத் நிஷாந்தவின் மரணம் மகிந்த, கட்சிக்கு இழப்பு!

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க



கொழும்பு, ஜன. 26

இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவின் மறைவு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் கட்சிக் கும் புத்தளம் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு மக்களுக்கும் பெரும் இழப்பாகும் என அரசாங்கத்தின் பிரதம கொறடாவும் அமைச்சருமான பிரசன்ன ரண துங்க தெரிவித்துள்ளார்.

"சனத் நிஷாந்த புத்தளம் மற்றும் சிலாபம் மாவட்ட மக்களுக்காக உழைத்தவர். புத்தளம் மற்றும் சிலாபத்தில் இரண்டு நிகழ்வுகளில் பங்கேற்றுவிட்டு கொழும்பு செல்லும் வழியில் அவர் இந்த விபத்தை சந்தித்துள்ளார்.

மே 9ஆம் திகதி அரகலய போராட்டத்தின்போது புத்தளத்தில் உள்ள அவரின் உத்தியோகபூர்வ இல்லம் எரிக்கப்பட்டது. எனவே, புத்தளத்தில் ஓய்வெடுக்க வீடு இல்லாத நிலையில் கொழும்புக்கு திரும்பிக் கொண்டிருந்த போதே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.பொலிஸ் விசாரணைகளின்படி, இராஜாங்க அமைச்சரின் சாரதி மதுபோதையில் இருக்கவில்லை - என்றும் அமைச்சர் தெரிவித்தார். (ஐ)

# தொழிலுக்காக கட்டார் சென்ற இளம் குடும்பஸ்தர் விபத்தில் பலி!

வடமராட்சி, ஜன. 26

தொழில் வாய்ப்புக்காக கட்டாருக்கு சென்ற இளம் குடும்பஸ்தர் விபத்து ஒன்றில் உயிரிழந்தார்.

அவர் அங்கு சென்ற 26 நாட்களில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில், வடமராட்சி - அல்வாய் - மனோகரா பகுதியை சேர்ந்த டிபில்ஸ்குமார் துவிகரன் (வயது 24) பெண் குழந்தை ஒன்றின் தந்தையே இவ்வாறு உயிரிழந்தார்.

நவக்கிரியை சொந்த இடமாகக் கொண்ட இவர் மூன்று வருடங்களுக்கு முன்னர் திருமணம் செய்து அல்வாயில் வசித்து வந்தார்.

உயிரிழந்தவரின் சடலம் அவரின் சொந்த இடத்துக்கு அனுப்பப்பட்டு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அவரின் இறுதிக் கிரியைகள் நடைபெற்றன. (ஐ-02)

# யாழ். பிரதி பொலிஸ் மா அதிபராக ஜெயசிங்க!

கொழும்பு, ஜன. 26

யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு பொறுப்பாக பிரதி பொலிஸ் மா அதிபராக ஜே. இ. கே. ஜெயசிங்கவை நியமித்துள்ளார் பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன்.

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் மூன்று பிரதிப் பொலிஸ் மா அதிபர்களுக்கு நேற்று முன்தினம் முதல் இடமாற்றம் வழங்கியுள்ளார்.

இதன்படி, போக்குவரத்து மற்றும் தொடர்பாடல் பிரிவுக்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபராக இருந்த கே. கடுப்பிட்டிய மேல் மாகாணத்தின் வடக்கு பிரிவுக்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் எம். ஆர். ஏ. எம். செனரத் அந்தப் பதவியிலிருந்து போக்குவரத்து மற்றும் தொடர்பாடல் பிரிவுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபராக ஜே. இ. கே. ஜெயசிங்க நியமிக்கப்பட்டுள்ளார். (ஐ)

# தட்டுப்பாடாகவுள்ள மருந்துகள் சில வாரங்களில் கிடைக்கும்!

## சுகாதார அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, ஜன. 26

நாட்டின் மருத்துவக் கட்டமைப்பில் 60 வகையான மருந்துகளுக்கு தொடர்ந்தும் தட்டுப்பாடு நிலவுகிறது என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன், தட்டுப்பாடாக உள்ள மருந்துகள் சில வாரங்களில் நாட்டுக்குக் கொண்டு வரப்படும் என்றும் அந்த அமைச்சு தெரிவித்துள்ளது.

பற்றாக்குறையாகவுள்ள சகல வகையான மருந்துகளும் தற்போது முன்பதிவு செய்யப்பட்டுள்ளதாக மருந்து விநியோகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது. இந்த மருந்துகள் சில வாரங்களுக்குள் கட்டம் கட்டமாக நாட்டுக்குக் கொண்டுவரப்படும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

உள்நாட்டு உற்பத்தியாளர்களிடமிருந்து தற்போது அதிகளவு மருந்துகள் கொள்வனவு செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# யாழில் தங்கியிருந்த பாகிஸ்தானியர் கைது!

## மற்றொருவர் தப்பியோட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 26

யாழ்ப்பாணம் நகரத்தில் பாகிஸ்தானியர் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டார். எனினும், மற்றொருவர் தப்பியோடியுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

யாழ்ப்பாணத்தின் காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள கடை ஒன்றில் இரண்டு பாகிஸ்தானியர்கள் பொருட்களை கொள்வனவு செய்துவிட்டு, பணத்தை செலுத்த முற்பட்டுள்ளனர். அவர்கள் மீது சந்தேகம் கொண்ட கடைக்காரர் அவர்களை விசாரித்துள்ளார்.

அப்போது, அங்கிருந்த ஒருவர் தப்பியோடியுள்ளார். இது தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு தகவல் அளிக்கப்பட்டது. பொலிஸார் பிடித்து வைக்கப்பட்டிருந்த பாகிஸ்தானியரை கைது செய்தனர்.

அவரிடம் நடத்தப்பட்ட விசாரணையில் சந்தேக நபர் கச்சேரியடியில் வீடு ஒன்றில் தங்கியுள்ளார் என்று கூறியுள்ளார். தப்பியோடியவர் தொடர்பில் தகவல் வெளியாகவில்லை. (ஐ)

# ரி - 56 துப்பாக்கி ரவைகளுடன் முல்லைத்தீவில் இளைஞர் கைது!

முல்லைத்தீவு, ஜன. 26

ரி - 56 துப்பாக்கியின் 100 ரவைகளுடன் முல்லைத்தீவில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு - உடுப்புக்குளத்தில் வீடு ஒன்றில் பொலிஸார் நடத்திய தேடுதல் நடவடிக்கையின்போதே குறித்த இளைஞர் கைது செய்யப்பட்டார்.

நேற்று முன்தினம் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இந்தத் தேடுதல் நடத்தப்பட்டது.

சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்த தயாராகி வரும் பொலிஸார் மேலதிக விசாரணைகளையும் தொடர்ந்து வருகின்றனர். (ஐ)

# சிரேஷ்ட பெண் சட்டத்தரணிகள் இளம் சட்டத்தரணியை தாக்கினர்!

கொழும்பு, ஜன. 26

இளம் வழக்கறிஞர் ஒருவரை சிரேஷ்ட பெண் வழக்கறிஞர்கள் உள்ளிட்ட ஐவர் தாக்கியுள்ளனர் என்று நிட்டம்புவை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கம்பஹா - அத்தனகல்ல நீதிவான் நீதிமன்றத்தில் கடமையாற்றும் சட்டத்தரணியே இவ்வாறு தாக்குதலுக்குள்ளானவர். இவர், நிட்டம்புவை பிரதேசத்தை சேர்ந்தவராவார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நிட்டம்புவை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# இரு புதிய இன மாதுளை மரங்கள் நாட்டில் அறிமுகம்!

கொழும்பு, ஜன. 26

விவசாய செய்கைக்கு ஏற்ற இரண்டு புதிய மாதுளை மரங்களை விவசாய திணைக்களம் அறிமுகப்படுத்தி யுள்ளது.

விவசாய திணைக்களத்தின் ஹோமாகம தாவர வைரஸ் அடையாள நிலையம் முன்னெடுத்த ஆய்வுக ளின் அடிப்படையில், குறித்த இரண்டு புதிய வகை மாதுளைகளும் நேற்று முன்தினம் அறிமுகப் படுத்தப் பட்டுள்ளன.

மாலி பிங்க், லங்கா ரெட் என பெயரிடப்பட்டுள்ள இந்த இரண்டு புதிய மாதுளை வகைகளையும், வெளி நாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்படும் சிவப்பு நிற மாதுளைகளுக்கு மாற்றீடாக பயன்படுத்த முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம், மாதுளைகளுக்கான இறக்குமதி செல வினத்தை கட்டுப்படுத்த முடியும் என விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

30 வருட ஆயுட்காலத்தை கொண்ட இந்த புதிய வகை மாதுளை மரத்தில் இருந்து வருடாந்தம் 20 முதல் 25 கிலோகிராம் வரையில் மாதுளை செய்கையை மேற்கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு ஏக்கருக்கு 400 மரங்களை நடுவதால் வருடாந் தம் 80 இலட்சம் ரூபாயை வருமானமாக பெறமுடியும் என விவசாய திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 26.01.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இந்தியாவின் மிரட்டலில் சுருண்டது இங்கிலாந்து!




ஹைதராபாத், ஜன. 26

இந்தியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் முதல் இன்னிங்ஸில் இங்கிலாந்து அணி 246 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. பதிலுக்கு ஜெய்ஸ்வாலின் அதிரடியால் ஒரு விக்கெட் இழப்புக்கு 119 ஓட்டங்களை பெற்றுள்ளது இந்திய அணி.

பென் ஸ்ரோக்ஸ் தலைமையிலான இங்கிலாந்து அணி 5 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாட இந்தியா சென்றுள்ளது. அங்கு இரு அணிகளுக்கும் இடையிலான முதல் டெஸ்ட் போட்டி ஹைதராபாத்தில் நேற்று தொடங்கியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தது.

தொடக்கம் கொடுத்த ஜாக் கிராவ்லி, பென் டக்கெட் இணை 55 ஓட்டங்கள் வரை தாக்குப் பிடித்தது. 35 ஓட்டங்கள் எடுத்திருந்த பென் டக்கெட்டை ஆட்டமிழக்க செய்து இந்தியாவின் விக்கெட் வேட்டையை தொடங்கி வைத்தார் ரவிச்சந்திரன் அஸ்வின்.

சில நிமிடங்களிலேயே ஜாக் கிராவ்லியையும் (20 ஓட்டங்கள்) அஸ்வின் தனது சுழலால் வீழ்த்த, ஜடேஜா ஒல்லி போப் (ஓர் ஓட்டம்), அக்ஸர் பட்டேல் ஜொன்னி பெயர்ஸ்ரோ (37 ஓட்டங்கள்) என வீழ்த்தி இங்கிலாந்துக்கு அதிர்ச்சி கொடுத்தனர்.

மிகவும் எதிர்பார்க்கப்பட்ட ஜோ ரூட்டை 29 ஓட்டங்களில் வெளியேற்றினார் ஜடேஜா. விக்கெட் சரிவுகள் இருந்தாலும் அணித் தலைவர் பென் ஸ்ரோக்ஸ் நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். அஸ்வின், ஜடேஜா, அக்ஸர் என இந்தியாவின் சுழற்பந்து வீச்சை திறம்பட சமாளித்து அரைச்சதம் கடந்த பென் ஸ்ரோக்ஸ் கடைசி விக்கெட்டாக பும்ரா பந்தில் வீழ்ந்தார்.

ஸ்ரோக்ஸ் அடித்த 70 ஓட்டங்களின் உதவியுடன் இங்கிலாந்து அணி சகல விக்கெட்களையும் இழந்தபோது 246 ஓட்டங்களைப் பெற்றது.

இந்தியா தரப்பில் அஸ்வின் மற்றும் ஜடேஜா தலா 3 விக்கெட்களும், அக்ஸர் மற்றும் பும்ரா தலா 2 விக்கெட்களும் வீழ்த்தினர்.

பதிலுக்கு தனது முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி வரும் இந்திய அணி அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகின்றது. அந்த அணிக்கு ஜெய்ஸ்வால் - ரோஹித் சர்மா இணை தொடக்கம் கொடுத்தனர். 80 ஓட்டங்கள் வரை இந்தக் கூட்டணி நிலைத்தது.

ரோஹித் சர்மா லீச்சின் பந்தில் ஸ்ரோக்ஸிடம் பிடி கொடுத்து 24 ஓட்டங்களுடன் வெளியேறினார். மறுமுனையில் அதிரடியாக ஆட்டத்தைத் தொடர்ந்த ஜெய்ஸ்வாலுடன் ஷூப்மன் கில் இணைந்தார்.

கில் பொறுமையாக ஆட ஜெய்ஸ்வால் அதிரடியை தொடர்ந்தார். நேற்றைய தினம் முதல் நாள் ஆட்டம் நிறைவடைந்தபோது ஜெய்ஸ்வாலின் அதிரடியால் இந்திய அணி 23 ஓவர்கள் நிறைவில் ஒரு விக்கெட் இழப்புக்கு 119 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

ஜெய்ஸ்வால் 70 பந்துகளில் 3 சிக்ஸர்கள், 9 பௌண்ட்ரிகளுடன் 76 ஓட்டங்களையும் கில் 43 பந்துகளில் 14 ஓட்டங்களையும் பெற்றிருந்தனர்.

இன்று போட்டியின் இரண்டாம் நாளாகும். (ஐ)



ஆஸி. ஓப்பன் ரென்னிஸ்

## அல்கராஸ் அதிர்ச்சி தோல்வி!

மெல்பர்ன், ஜன. 26

அவுஸ்திரேலிய ஓப்பன் ரென்னிஸ் தொடரின் ஆடவர் ஒற்றையர் காலிறுதியில் ஸ்பெயின் வீரர் கார்லோஸ் அல்கராஸ் அதிர்ச்சி தோல்வி கண்டார்.

அவுஸ்திரேலியாவின் மெல்பர்ன் நகரில் நடைபெற்று வரும் இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி சுற்றில் 3ஆம் நிலை வீரரான ரஷ்யாவின் டேனியல் மெத்வதேவ் 7-6(7-4), 2-6, 6-3, 5-7, 6-4 என்ற செற் கணக்கில் 9ஆம் நிலை வீரரான போலந்தின் ஹூபர்ட் ஹர்காஸை வீழ்த்தினார். இதன் மூலம் மெத்வதேவ் அரையிறுதி சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றொரு காலிறுதி போட்டியில் ஆறாம் நிலை வீரரான ஜேர்மனியின் அலெக்சாண்டர் ஜிவெரேவ் 6-1, 6-3, 6-7, 6-4 என்ற செற் கணக்கில் 2ஆம் நிலை வீரரான ஸ்பெயினின் கார்லோஸ் அல்கராஸை வீழ்த்தி அரையிறுதியில் நுழைந்தார். (ஐ)

ஆஸி. ஓப்பன் ரென்னிஸ்:

## டயானா, குயின் ஷெங் அரையிறுதிக்கு தகுதி!



மெல்பர்ன், ஜன. 26

ஆஸி. ஓப்பன் ரென்னிஸில் சீனாவின் குயின் ஷெங், உக்ரைனின் டயானா யாஸ்ட்ரெம்ஸ்கா ஆகியோர் அரையிறுதிக்கு முன்னேறினர்.

அவுஸ்திரேலியாவின் மெல்பர்ன் நகரில் அவுஸ்திரேலிய ஓப்பன் ரென்னிஸ் தொடர் நடக்கிறது. இதில்,

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி சுற்றில் உக்ரைனின் டயானா யாஸ்ட்ரெம்ஸ்கா 6-3, 6-4 என்ற நேர் செற்றில் செக் குடியரசின் லிண்டா நோஸ்கோவாவை வீழ்த்தி அரையிறுதி சுற்றில் கால்பதித்தார்.

மற்றொரு காலிறுதி போட்டியில் 15ஆம் நிலை வீராங்கனையான சீனாவின் குயின் ஷெங் 75ஆம் நிலை வீராங்கனையான ரஷ்யாவின் அனா கலின்ஸ்காயாவுடன் மோதினார். இதில் குயின் ஷெங் 6-7(4-7), 6-3, 6-1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறினார். (ஐ)




## வளர்ந்து வரும் வீரருக்கான விருதை வென்றார் ரச்சின்!

டுபாய், ஜன. 26

2023ஆம் ஆண்டுக்கான வளர்ந்து வரும் வீரருக்கான ஐ. சி. சி. விருதை வென்றுள்ளார் நியூஸிலாந்து அணியின் இளம் வீரர் ரச்சின் ரவீந்திரா. 2023ஆம் ஆண்டுக்கான சிறந்த ரி - 20 கிரிக்கெட் வீரர் விருதை இந்திய துடுப்பாட்ட வீரர் சூர்யகுமார் யாதவ் வென்றுள்ளார்.

ஆண்டுதோறும் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தும் கிரிக்கெட் வீரர்களுக்கு பல்வேறு பிரிவுகளின் கீழ் விருதுகளை வழங்கி சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ. சி. சி.) பாராட்டுவது வழக்கம். அந்த வகையில் அதற்கான பரிந்துரை அறிவிக்கப்பட்டன. இந்த சூழலில் வளர்ந்து வரும் வீரர் மற்றும் இருபது - 20 கிரிக்கெட் வீரருக்கான விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் வளர்ந்து வரும் வீரருக்கான விருதை ரச்சின் ரவீந்திரா மற்றும் இருபது - 20 சிறந்த கிரிக்கெட் வீரர் விருதை சூர்யகுமார் யாதவ் ஆகியோர் வென்றுள்ளனர்.

ரச்சின் ரவீந்திரா, இந்தியாவில் கடந்த ஆண்டு நடைபெற்ற ஒருநாள் உலகக் கிண்ணத் தொடரில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியிருந்தார். (ஐ)






## சச்சினின் சாதனையை தகர்த்தார் ஜோ ரூட்!

ஹைதராபாத், ஜன. 26

இந்தியா சென்றுள்ள இங்கிலாந்து அணி 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது. இதில், முதல் போட்டி நேற்று ஆரம்பமானது.

முதல் இன்னிங்ஸில் இங்கிலாந்து 246 ஓட்டங்களை எடுத்திருந்தது. இதில், ஜோ ரூட் நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தி 29 ஓட்டங்கள் அடித்தார். இதன் மூலம் இந்தியாவுக்கு எதிராக தன்னுடைய வாழ்வில் டெஸ்ட் போட்டிகளில் இதுவரை 2,555 ஓட்டங்களை குவித்துள்ளார்.

இதன் மூலம் வரலாற்றில் இந்தியா மற்றும் இங்கிலாந்து அணிகள் மோதிய டெஸ்ட் போட்டிகளில் அதிக ஓட்டங்கள் அடித்த வீரர் என்ற சச்சினின் சாதனையை உடைத்து ஜோ ரூட் புதிய சரித்திரம் படைத்துள்ளார்.

அதிக ஓட்டங்கள் குவித்த வீரர்களின் பட்டியலில் ஜோ ரூட் - 2,555, சச்சின் - 2,535, சுனில் கவாஸ்கர் - 2, 483, அலெக்ஷயர் குக் - 2,431, விராட் கோலி - 1,991 (ஐ)

# அமெரிக்கா : டொனால்ட் டிரம்ப் அதிபர் வேட்பாளர் ஆகிறாரா?

அமெரிக்காவின் அடுத்த அதிபர் வேட்பாளருக்கான போட்டியில், குடியரசுக் கட்சி வேட்பாளர்களுக்குள் முன்னாள் அதிபர் டொனால்ட் டிரம்ப் வெற்றி பெற்றார்.

நிக்கி ஹேலியுடன் நேரடியாகப் போட்டியிடும் அவர், கடந்த செவ்வாயன்று (ஜனவரி 23) நியூ ஹேம்ப்ஷைர் மாகாணத்தில் நடைபெற்ற குடியரசுக் கட்சியின் வேட்பாளர் தேர்வுப் போட்டியில் 55 வீத வாக்குகளைப் பெற்றிருக்கிறார்.

ஒரு மாகாணத்தில் முதல் வெற்றியைப் பெற்றிருந்தாலும், இதனால் எதிர்வரும் நவம்பர் மாதம் நடக்கவுள்ள அமெரிக்க அதிபர் தேர்தலில் குடியரசுக் கட்சியின் வேட்பாளர் டிரம்ப் தான் என்பது முடிவாகி விட்டது.

இந்த முடிவுகள் வெளியானபோது உரையாற்றிய டிரம்ப், ஹேலி மற்றும் முன்னர் அவரது போட்டியாளரான இந்திய வம்சாவளியைச் சேர்ந்த விவேக் ராமசாமி ஆகியோரைக் கடுமையாக விமர்சித்தார்.

ஆனால் டிரம்பை எதிர்த்துப் போட்டியிடும் நிக்கி ஹேலி, தான் போட்டியிலிருந்து விலகப் போவதில்லை என்று கூறியிருக்கிறார். இதையடுத்து டிரம்ப் ஹேலியை 'மோசடிக்காரர்' என்று விமர்சித்தார்.

நவம்பர் பொதுத் தேர்தலில் ஜனநாயகக் கட்சி வேட்பாளரான அதிபர் ஜோ பைடனுடன் மீண்டும் போட்டியிடுவது இப்போது மிகவும் உறுதியாகத் தெரிகிறது.

நியூ ஹாம்ப்ஷயரில் டிரம்பின் வெற்றி சமீபத்திய கருத்துக் கணிப்புகளால் கணிக்கப்பட்ட 20-புள்ளி வித்தியாசத்துடன் பொருந்தவில்லை என்றாலும், வேட்பாளர் போட்டியின் தற்போதைய நிலை மாறியுள்ளது.

ஒவ்வொரு பகுதியில் நடக்கும் வாக்கெடுப்பிலும், ஓர் உண்மை தெளிவாகிறது. பல மாதங்களாக கருத்துக் கணிப்புகள் காட்டுவது போல், குடியரசுக் கட்சி இன்னும் டொனால்ட் டிரம்பின் கட்சி தான்.

அரசியல் வீழ்ச்சியிலிருந்து மீண்டு வந்த டிரம்ப் கடந்த சில ஆண்டுகளாகவே பல சர்ச்சைகளிலும் வழக்குகளிலும் டொனால்ட் டிரம்ப் சிக்கினார். அவரது அரசியல் வாழ்க்கையே முடிவுக்கு வந்துவிட்டதாகவும் பலர் நினைத்தனர்.

கடந்த 2021ஆம் ஆண்டு ஜனவரி மாதம் அமெரிக்க நாடாளுமன்ற கட்டடத்தில் டிரம்ப் ஆதரவாளர்கள் நடத்திய கலவரம் அமெரிக்காவையே அதிரவைத்தது.



கடந்த 2020ஆம் ஆண்டின் தேர்தலைக் கவிழ்க்க முயன்ற குற்றச்சாட்டில் கடந்த ஆணடு ஆகஸ்ட் மாதம் அவர் ஜார்ஜியாவில் கைது செய்யப்பட்டார். அதோடு சேர்த்து அவர் அப்போது வெவ்வேறு வழக்குகளுக்காக நான்கு முறை கைது செய்யப்பட்டிருந்தார்.

ஆனால் இவை அனைத்தையும் தாண்டி தற்போது அதிபர் வேட்பாளர் போட்டியில் முன்னிலை வகித்து வருகிறார்.

**இது எப்படி சாத்தியமானது?**

இதில் ஆச்சரியப்பட எதுவுமில்லை என்கிறார் டிரம்பின் பட்ஜெட் இயக்குநராகவும், அவரது ஆட்சியில் வெள்ளை மாளிகை தலைமை அதிகாரியாகவும் இருந்த மிக் முல்வானே.

ஓர் ஆண்டுக்கு முன்பு வரை டிரம்ப் மீண்டும் அரசியல் களத்தில் முன்னேற்றம் காண்பார் என்பது சந்தேகமாகவே இருந்தது, என்கிறார் அவர்.

"டிரம்ப் தனக்கு எதிராக நடந்த குற்ற விசாரணைகளையே தனக்குச் சாதகமாக மாற்றிக்கொண்டார்," என்கிறார் முல்வானே.

"பைடன் அரசாங்கம் அரசியல் எதிரிகளை வேட்டையாடுவது போல இதைச் சித்தரித்தார். இதை வைத்து வாக்காளர்களிடம் ஒரு செய்தியைச் சொன்னார்.

'எனக்கு நடப்பதைப் பாருங்கள். எனக்கே இந்த நிலைமை என்றால், உங்கள் நிலைமையை யோசித்துப் பாருங்கள். எனக்கு வாக்களித்தால் உங்களுக்கு இது நடக்காமல் பார்த்துக் கொள்கிறேன்' என்றார் அவர்," என்று முல்வானே பிபிசி ரேடியோ 4 நிகழ்ச்சி யில் கூறினார்.



**அமெரிக்க அதிபர் வேட்பாளர் தேர்தல் ஏன் முக்கியமானது?**

அமெரிக்க அதிபர் வேட்பாளர் தேர்தலை அமெரிக்கா மட்டுமல்ல, உலகமே கூர்ந்து கவனிக்கிறது.

அமெரிக்கா தற்போது யுக்ரேன், காஸா ஆகிய இரண்டு போர்களில் ஈடுபட்டுள்ளது. இதற்கிடையில், அமெரிக்க - சீனா உறவுகள் மோசமடைந்து, ஆசிய பசிபிக் பிராந்தியத்தில் பதற்றம் அதிகரித்துள்ளது.



மத்திய அமெரிக்க நாடுகளும் பேசு பொருளாக மாறியிருக்கின்றன. அதிக எண்ணிக்கையிலான புலம்பெயர்ந்தோர் எல்லை வழியாக அமெரிக்காவிற்குள் நுழைய முயற்சி செய்கிறார்கள். மேலும் ஏமனில் ஹூத்திகளுக்கு எதிராக அமெரிக்கா தலைமையிலான வான்வழித் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

கிட்டத்தட்ட உலகின் எல்லாப் பகுதியிலும் அமெரிக்கத் தலைமை ஏதோ வொரு வகையில் ஆதிக்கம் செலுத்து கிறது.

டொனால்ட் டிரம்ப் மீண்டும் பத விக்கு வருவதற்கான வாய்ப்பும், அவரது 'முதலில் அமெரிக்கா' வெளியுறவுக் கொள்கையும், ஏற்கெனவே கொந்தளிப்பான இந்தச் சூழ்நிலையை மேலும் நிச்சயமற்றதாக ஆக்குகிறது.

சில நாடுகள் அவர் மீண்டும் வருவதை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றன. ஆனால் அமெரிக்காவின் பல நட்பு நாடுகள், டிரம்பின் மறுபிரவேசத்தைக் கண்டு மிகவும் பயப்படுகிறார்கள்.

**அமெரிக்காவில் அதிபர் வேட்பாளர்கள் எப்படி தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்?**

இந்த ஆண்டு நடக்கவிருக்கும் அதிபர் தேர்தலுக்கான பிரசாரம் சிறப்பாக நடந்து வருகிறது. இது ஒன்பது குடியரசுக் கட்சியினர், நான்கு ஜனநாயகக் கட்சியினர், இரண்டு சுயேச்சைகள் என 15 வேட்பாளர்களுடன் தொடங்கியது.

இரண்டு பிரதான கட்சிகளும் ஒரு அதிபர் வேட்பாளர், ஒரு தொடர் மாநில ப்ரைமரிஸ் (primaries) மற்றும் காக்கஸ்களை (Caucuses) நடத்துவதன் மூலம் பரிந்துரைக்கின்றன.

இதில், கட்சிகளுக்கு இடையே வேறுபாடுகள் உள்ளன. செயல்முறையும் ஒரு மாகாணத்திற்கும் மற்றொரு மாகாணத்திற்கும் மாறுபடும்.

மார்ச் 3ஆம் தேதி 'சூப்பர் செவ்வாய்' என்று அழைக்கப்படுகிறது, ஏனெனில் அந்த நாளில் 12 மாகாணங்கள் தங்கள் முதன்மைப் போட்டிகளை நடத்தும்.

அதிபர் பைடன் இந்த ஆண்டின் தொடக்கத்தில்தான் மீண்டும் போட்டியிடுவதாக அறிவித்தார். சில நீண்ட சவால்கள் இருந்தபோதிலும் - ஜனநாயகக் கட்சியின் வேட்புமனுவை எளிதாக வெல்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

குடியரசுக் கட்சியில், அதிபர் டொனால்ட் டிரம்ப் முதல் இரண்டு மாகாணப் போட்டிகளிலும் வெற்றி பெற்றார், மேலும் அவர் ஏற்கெனவே வேட்பாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டார் எனத் தெரிகிறது.

முன்னாள் அதிபர் ஜான் எஃப் கென்னடியின் மருமகன் ராபர்ட் எஃப் கென்னடி ஜூனியர் உட்பட சில சுயேட்சை வேட்பாளர்களும் அதிபர் தேர்தலில் போட்டியிடுகின்றனர்.



# வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின் தொழில் முனைவோர் மாநாடு

## யாழ் 2024!

**க.தில்லைக்குமரன்**

35 ஆண்டுகளுக்கு முன்பு நியூ யார்க், நியூ செர்சி, ஹாரிஸ்பர்க், டெலவர் பகுதித் தமிழ்ச்சங்கம் ஆகிய சங்கங்களு டன் இலங்கைத் தமிழ்ச்சங்க மும் இணைந்து வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையைத் துவங்கினர். துவங்கிய காலத்திலிருந்து தமிழீழத்தில் பேரவையின் நிகழ்வொன்றை நடத்த வேண்டுமென்பது பலரது கனவு. 2009 ஆம் ஆண்டு தமிழினப் படுகொலைக்கு பின்பாவது ஒரு விழா நடத்த வேண்டும் என்று ஏங்கியவர்களில் நானும் ஒருவன். 2006-2008 காலங்களில் நான் தலைமைப் பணியை பொறுப்பேற்ற நாள் முதல் நான் கண்ட கனவு 2024 சனவரி 19-ம் நாள் யாழ்ப்பாணப் பல்கலைகழகத்தின் சிறப்பு மிக்க கைலாசபதி அரங்கத்தில் நிறைவேறியது.

போருக்குப்பின் 15 ஆண்டுகள் ஏதும் செய்ய இயலவில்லை என்பது என் போன்றோர் அனைவரின் நெஞ்சத்தை யும் உறுத்திவந்தது உண்மைதான். இப்போது, முனைவர் பாலா சுவாமி நாதன் அவர்களின் தலைமையில் முதன் முறையாக பேரவையின் தொழில் முனைவோர் மாநாடு யாழ்ப்பாணத்தில் நடந்தேறியது என்பது ஒரு வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த நிகழ்வு. பேரவையுடன் யாழ் ஐவு உரடி மற்றும் யாழ்ப்பாண பல்கலைக்கழகமும் இணைந்து இந் நிகழ்வை ஒழுங்கு செய்தது மேலும் சிறப்பு. யாழ் பல்கலையின் 50-வது ஆண்டு இது. 50 ஆண்டுகளில் ஒருநாள் கூட விடுமுறை விடாமல் தொடர்ந்து மாணவர்களுக்கு அருந்தொண்டாற்றி வருகிறது இப்பல்கலைக்கழகம். பெருமைவாய்ந்த இப்பல்கலையுடன் இணைந்து இவ்விழாவை நடத்தியது பேரவையின் பல சாதனைகளில் ஒரு பொன்மகுடம். பேரவையின் 3-வது தொழில் முனைவோர் மாநாடு இது. இம்மாநாடு போரினாலும் அதற்கு பின்பும் சொல்லொண்ணா துன்பம் அனுபவித்து வரும் ஈழத்தமிழர்களின் மனதிற்கு ஒத்தடம் கொடுத்து, அவர்களின் வலிக்கு மருந்தளித்து, நம்பிக்கையையும், ஊக்கத்தினையும் தந்தது என்பது மிகையல்ல, உண்மை. அமெரிக்கா, கனடா, இலண்டன், தமிழ் நாடு போன்ற இடங்களிலிருந்து தமிழர்கள் பலர் வந்து சிறப்பு செய்தது மட்டுமல்லாமல் தமிழ் மண்ணிற்காக தம் இன்னுயிரையும் அர்ப்பணித்த மாவீரர்களுக்கும், அங்கு அடக்குமுறைக் குள் வாழும் மக்களுக்கும் இம்மாநாடு நல்லதொரு நம்பிக்கையைத் தந்துள்ளது என்று மாநாட்டில் கலந்துகொண்டவர் கள் கூறியது மனதை நெகிழச் செய்தது.

நாதசுரம், தவில் இசையுடன், குத்து விளக்கேற்றி, தமிழ்த்தாய் வாழ்த்துடன் இம்மாநாட்டைத் துவக்கி வைத்து தலைவர் பாலா சுவாமிநாதன் அவர்கள் உரையாற்றியபோது, இன்றைய பேர வைக் கூட்டம் ஒரு நிகழ்வு மட்டுமல்ல் இது தமிழர் ஒருமைப்பாட்டின் கொண் டாட்டம் - மனங்களையும் இதயங்களை யும் ஒன்றிணைக்கும் நோக்கத்துடன் நமது அன்புக்குரிய தமிழ்ச் சமூகத்தின், குறிப்பாக வடக்கு- கிழக்கு பிராந்தி யத்தின் பொருளாதாரத்தை புத்துயிர் பெறச் செய்யும் சீரிய முயற்சி" என்று கூறி அனைவரது எண்ணங்களையும் பிரதிபலித்தார். தொடர்ந்து முன்னாள் தலைவர் திரு. க. தில்லைக்குமரன் பேரவையின் ஈழத்தமிழர்களுடனான உறவை குறித்து விரிவாக உரையாற்று கையில் ஈழத்தமிழர்களுக்கும், ஈழச்சிக்கலுக்கும் பேரவை 2009 முதல் 'உலகத் தமிழர் நேரம்' நிகழ்ச்சியின் மூலம் செய்து வரும் பணிகளைச் சுட்டிக்காட்டினார்.

மாநாட்டின் சிறப்பு விருந்தினராக திரு. ராஜ் ராஜ்ரட்ணம் அவர்கள் பங்கேற்று உணர்ச்சிமிக்க உரையாற்றி யது இம்மாநாட்டின் சிறப்பு. அவர் பேசுகையில் விவசாயிகளுக்கு நிதி யளித்து அவர்களுக்கு உதவுவதாகவும், அரிசி அரைக்கும் தொழிற்சாலை




அமைத்து விவசாயிகளுக்கு அதிக இலாபம் ஈட்ட வழி வகுக்கவுள்ளதாக வும் கூறினார். திரு. ராஜ்ரட்ணம் அவர்களின் 'சமனற்ற நீதி' என்கிற புத்தக வெளியீடு மறுநாள் மற்றொரு விழாவில் நடைபெற்றது. மாநாட்டில் திரு. ராஜ் பேசும் போது அவரின் தமிழுணர்வு நன்கு தெரிந்தது. ஈழத்திற்குப் பல உதவி களை அவர் செய்து வருகிறார், குறிப் பாக விவசாயத்துறையில் அவர் பல முன்னேற்பாடுகளை செய்யப் போவதா கக் கூறியது அனைவரையும் கவர்ந்தது. தொடர்ந்து யாழ் பல்கலையின் துணைவேந்தர் சிறீசற்குணராஜா தமிழரின் அறிவுத்திறனையும், வாணிகத்திறமையையும், கடலோடும் வன்மையையும் விளக்கியது அனைவருக்கும் உத்வேகத்தை கொடுத் தது. தொடர்ந்து பல உரையாடல்கள், உரைகள், பட்டறைகளும் நடந்தது.

அறிஞர் கைலாசபதி உள்ளரங்கம் முழுதும் மாணவர்கள் மற்றும் தொழில் முனைவோர், பேராசிரியர்கள் போன்றோரினால் நிரம்பி வழிந்தது. University Business Linkage (UBL) அமைப்பை தலைமையேற்றி நடாத்தி வரும் பேராசிரியர் ஈசுவர மோகன் அவர்கள் வடக்கின் நிலையை விரிவாக எடுத்துக்கூறி என்னென்ன தேவை என் பது குறித்து பேசினார். அவருடன் பேரவை இணைந்து பெரிய உதவிகளை செய்வது அம்மக்களால் பெரிதும் வரவேற்கப்படும் என்பது உண்மை. யாழ் மண்ணில் இந்த நிகழ்வை வெற்றிகரமாக நடத்துவதற்கு அரும்பாடுபட்டு சாத்திய மாக்கிய ஷான் நந்தகுமார், பார்த்திபன் பரஞ்சோதி, சயந்தன் போன்றோர் என் நெஞ்சில் உயர்ந்து நிற்கின்றனர்.

பேரவைத் தலைவர் பாலா சுவாமி நாதன், பெருமதிப்பிற்குரிய ராஜ் ராஜ ரட்ணம், முன்னாள் தலைவர் கால்டு வெல் வேள்நம்பி, தில்லைக்குமரனாகிய நான் ஆகியோர் எடுத்திருக்கும் இந்த முயற்சிக்கு எத்தடை வரினும் தளராது செய்துமுடிக்க திடசங்கற்பம் பூண்டு நிற்கிறோம்.

**இந்த மாநாட்டின் நோக்கங்கள்**

- தமிழ் நாட்டிற்கும் ஈழத்திற்குமுள்ள பண்பாட்டு, மொழித் தொடர்பு நாம் நன்கறிவோம். பேரவை 35 ஆண்டுகளாக உலகெங்கும் வாழும் தமிழர்களை நாடு, மதம், சாதி, அரசியல் சார்பற்று இணைத்து வந்துள்ளது. ஈழத்தமிழர்கள் தமக்கு உடை எடுப்பது சென்னையிலும், காஞ்சியிலும்தான். ஈழம் சைவம் வளர்த்த மண், அம்மக்கள் போகாத தமிழ்நாட்டு கோவில்களே இல்லை. பேரவை ஈழத்தமிழர்களை பண்பாடு, மொழி ரீதியாக அரவணைத்து வந்தா லும், பொருளாதார ரீதியாக ஈழமும் தமிழ்நாடும் சற்று விலகியே இருந்துவரு கின்றன. தாய்த்தமிழ்நாட்டையும், தமிழீழத்தையும் தொழில் முறையாக இணைப்பது இம்மாநாட்டின் முதன் மைக் குறிக்கோள். அதை இந்த மாநாடு சாதித்துள்ளது என்றே கூறவேண்டும். தமிழ்நாட்டு தொழிலதிபர்கள் ஈழத்தில் தமது அலுவலகத்தின் கிளைகளைத் துவங்கி ஈழத்தமிழர்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்துவது எப்படி என்று இம்மாநாடு விவாதித்தது. தமிழ்நாட்டி லிருந்து வந்த சில தொழிலதிபர்கள் அது குறித்து விரிவாக பேசினர். நாம் அவ்வி வாதத்தை தொடர வேண்டும்.

- உணவுப் பொருட்கள் பதப்படுத்து வதில் தமிழ்நாடு முன்னணியிலுள்ளது. ஈழத்து உணவு வகைகள் தமிழ்நாட்டில் பலருக்கு தெரிவதில்லை. மேலும் தமிழ்நாட்டு உணவு உற்பத்தி நிபுணர்கள் ஈழத்தில் அந்த வசதிகளை ஏற்படுத்த வேண்டும் என்கிற நோக்கில் ஒரு பட்டறை நடந்தது. இம்மாநாட்டின் மற்றொரு சிறப்பு, முனைவர் பாலா சுவாமிநாதன், முன்னாள் தலைவர் திரு. கால்டுவெல் வேள்நம்பி, சென்னையில் வாழும் தொழிலதிபர் திரு. ரவி சுந்தரம் ஆகிய மூவரும் இணைந்து 300,000 வெள்ளிகள் வடகிழக்கு பகுதிகளில் அமெரிக்கத் தமிழர் நிதி அமைப்பின் மூலமாக சிறுதொழில்களில் முதலீடு செய்வோம் என்று அறிவித்தது மாநாட்டிற்கு வந்த அனைவரையும் நெகிழச்செய்தது. இந்த பெரும் முயற்சியை முன்னெடுக்கும் திரு. கால்டுவெல் அவர்களை நெஞ்சாரப் பாராட்டுவது நமது கடமை. அன்றிரவு நடந்த இரவு உணவு விருந்தில் இம்முயற் சியை திரு. கால்டுவெல் மற்றும் முனை வர் பாலா வந்திருந்த சிலரிடம் விவரித் துக் கூறியவுடன், ஆர்வத்துடன் கவனித்துக் கொண்டிருந்த ஈழத்தமிழ்த் தொழிலதிபர் ஒருவர் உடனேயே சிறிதும் தயக்கமின்றி நானும் அம்முயற்சி யில் பங்கேற்பேன் என்று தானும் 300,000 வெள்ளிகள் நிதியளிப்பதாக உறுதியளித்தது அனைவரையும் வியப்பிலும், மகிழ்ச்சிக் கடலிலும் ஆழ்த்தியது. நல்லவர்கள் உள்ளவரை நல்லது தொடர்ந்து நடந்தேறும் என்பது வட அமெரிக்காவைச் சேர்ந்த பெயர் வெளியிட விரும்பாத அந்நல்லுள்ளத் தின் மூலம் தமிழர்கள் அனைவர்க்கும் ஓர் எடுத்துக்காட்டு. இந்த நிதி அமெ ரிக்கத் தமிழர் நிதி மூலம் முதலீடு செய்யப்படும்.

(கட்டுரையாளர்: ஆலோசகர் - FiTEN யாழ்ப்பாணம், பேரவைத் தலைவர், 2006-2008)




DAN news
27ம் திகதி முதல்
மேல் மாகாணம் எங்கும்
DAN நிவ்ஸ்
24X7
27ம் திகதி முதல்
UHF-22
அலைவரிசையில்
முதலாவது இருமொழி செனல்